# இந்திய விடுதலைப்போரும் தந்தை பெரியாரும்

பொன்விழா ஆண்டு

அறிவானந்தர் அச்சகம்,
கும்பகோணம்.



26577

ஆசிரியர்.
அ. இளங்கீரன் எம்.ஏ., எம்.எட்.,



நான் யார் ?

ஈ.வெரா. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

---

**M. Kannan Printer**
**C/o, Dar Al Balagha**
**Printing Press**
**P.O. Box No. 1061**
**SHARJAH U.A.E.**

**29-1-98**

உழைப்பு

**நான் அச்சுப் பள்ளியில்**
**அன்பு மாணவனாய் நுழைந்தேன்**
**அன்றுதான் அந்த**
**அறிவாநந்தரின் உருவில்**
**அறிவார்ந்த அச்சுத் தொழிலாளியைக் கண்டேன்!**
**இயந்திரங்களை இயக்கும் விதத்தால்**
**இதயத்தைக் கொள்ளை கொண்டார் !**
**பார்ப்பவர்களுக்கோ நிச்சயம் இது வியப்பு !**
**புரிந்து கொண்டேன் இதுதான் உழைப்பு !!**

**– கண்ணன்**

"விரிந்த வரலாற்றுப் பெருமரம் கொண்ட
"திராவிடன்" ஆலின் சிறிய வித்தே!" - பாவேந்தர்.

30386

# இந்திய விடுதலைப் போரும் தந்தை பெரியாரும்



சிந்தனைகள் :
தமிழக முதல்வர்கள்,

பெருந்தலைவர் கு.காமராஜ்
பேரறிஞர் அண்ணா
டாக்டர் கலைஞர்

பொன்விழா ஆண்டு
1998

11-2-98
அறிவாநந்தர் வளாகம்

அறிவாநந்தர் அச்சகம்
85.நா.வடக்கு விதி
கும்பகோணம்

ஆசிரியர்
அ. இளங்கீரன் M.A., M.Ed.,

நினைவு கூர்ந்து வெளியிடுகிறோம்

## 11-2-1998 பகுத்தறிவுச் செம்மல்
## ம. சிங்காரவேலர் நினைவு நாள்

படைப்பு
**அ. இளங்கீரன்** M.A., M.Ed.,
விரமணியகம்
ஆரியப்படைவிடு
குடந்தை வட்டம் 612 703

- சிந்தனை
- செயல்
- ஆக்கம்

இர.முருகேசன் சரோசா
மக்கள் மேம்பாட்டு நலக்குழு
தாராசுரம் 612 702

மாலைச்செவ்வானம் மழைக்கு அடையாளம் !!
மனங்கள் சிவப்பது புரட்சிக்கு அடையாளம் !!
அறிவியக்கம் ஒரு நூறு



தமிழக முதல்வர்
டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி
அவர்கள்

முன்னாள் அமைச்சர்
திருகக்கனார் அவர்கள்
சிலை திறப்பு விழா
சமத்துவபுரம், மதுரை.
31-8-97

## மனித சங்கிலி

சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகாலம் ஆகியும் மற்றொரு சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய சூழ்நிலை இருப்பதை நினைக்கும் போது எனக்கு எந்த அளவுக்குக் கவலை, வேதனை இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

1969-ம் ஆண்டு நான் முதல் அமைச்சராக இருந்தபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவீதம் இட ஒதுக்கீடு என்பதை 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது. 89ம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் 18 சதவீதத்தை 19 சதவீதமாக உயர்த்தி இதில் மலைவாழ் மக்களுக்கு 1 சதவீதம் வழங்க உத்தரவிடப் பட்டது. இப்படி உயர்த்திய பிறகும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய இடம் கிடைக்க வில்லை என்று அவர்களை உலுக்கிக் கொண்டு இருக்கிறது.

டீ கடையில் 2 கிளாஸ்களில் டீ கொடுப்பது கொட்டாஞ்சியில் கொடுப்பது பழைய காலத்தில் அதிகம் இருந்தது. அந்த அளவுக்கு இப்போது இல்லை என்றாலும் இடுகாடு சுடுகாடு தனித்தனியே இருந்து சாதி பேத வேற்றுமை உணர்வுகள் இப்போதும் உள்ளன. இந்தத்தாழ்வு மனப்பான்மை இல்லாமல் இருப்பதற்கு மனத்தளவில் மாற்றம் வேண்டும் என்கிறோம்.

மாலைமலர்
97, செப். 1.

முதல்வர் கலைஞர்

நீர் இன்றி அமையாது உலகெனினும் அதனை வகைப்படுத்த
ஆறின்றி இயலாது என உணர்ந்தார்
ஆறு கண்டார் அதனாலே சோறு கண்டார்.

பூங்கொடி நூல்

# முன்னுரை

தந்தை பெரியார் தனது 95 ஆம் அகவை வரையிலும் ஆற்றியுள்ள மிகப்பரந்து விரிந்த பொதுத் தொண்டில், இந்தியநாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து அவர் ஆற்றியுள்ள தொண்டும் கொஞ்சம் நஞ்சம் அன்று. இந்திய நாட்டின் அரசியல், பொருளாதார விடுதலையுடன் சமுதாய விடுதலையினையும் இணைத்து அவர் பாடுபட முனைந்தபொழுது, பார்ப்பனர்கள் அதற்குத் தடைக்கல்லாக நிற்கவே காங்கிரசை விட்டு வெளியேறினார். அதன் காரணமாகவே இந்திய விடுதலைக்காகப் பெரியார் ஆற்றியுள்ள தொண்டுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. இருப்பினும் தன்னிகரற்ற அவரின் சுதந்திரப் போராட்டத் தொண்டுகள், பலராலும் பல்வேறு சமயங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பல்வேறு நூல்களில் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

அவை அனைத்தையும் ஒன்றிணைத்து, இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டின் நினைவாக, இலவச வெளியீடு என்பதனையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு பற்பல நூற்களை வெளியிட்டுள்ள தனது இரஞ்சிதம் பதிப்பகத்தின் மூலமாக ஓர் சிறிய நூலாக வெளியிட வேண்டுமென பெரியார் பற்றாளர் நவரச சிற்பி அச்சுக்கலை ஏந்தர் அறிவாநந்தர் அச்சக உரிமையாளர் இரா. முருகேசனார், துணைவியார் சரோசா, பெரிதும் ஆவல் கொண்டதால் " இந்திய விடுதலைப் போரும் தந்தை பெரியாரும்" என்ற இச்சிறியநூல் வெளிவருகின்றது. இச்சிறு நூலின் மூலம் 'இந்திய விடுதலைக்காகப் பெரியார் ஒன்றுமே செய்யவில்லை' என்று வேண்டுமென்றே குதர்க்கம் பேசித்திரியும் கோணல்புத்திக்காரர்களின் வாயடைக்கச் செய்யவேண்டும் என்ற என்னுடைய நீண்டநாள் ஆவலும் நிறைவேறியுள்ளது.

என்னால் முடிந்தவரை செய்திகளை ஒன்று திரட்டியுள்ளேன். இன்னும் பல செய்திகள் இதில் விடுபட்டுப் போயிருக்கக்கூடும். நண்பர்கள் அதனைச் சுட்டிக்காட்டினால் இத்துடன் இணைத்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர்களான, தந்தை பெரியாரால் 'பச்சைத்தமிழர்' எனப் புகழப்பட்ட தர்மவீரர் காமராசர், தந்தை பெரியாரின் தலை மாணாக்கராகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியாரால் கொள்கை உரம் ஊட்டப்பெற்று தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் தன்னிகரற்ற தலைமகனாய்த் திகழ்ந்துவரும் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரின் கருத்துக்கள் தமிழ்நாடு என்பது என்றுமே 'பெரியார்நாடு' தான் என்பதனை நமக்கு நிலைநாட்டிக் காட்டும் வைரவரிகள் ஆகும்.

வீரமணியகம் — அன்புடன்

ஆரிப்படைவீடு — அ. இளங்கிரன்

6-12-97

---

அறிவாநந்தர் அச்சகம்
கும்பகோணம் - 612 001,

இந்திய விடுதலைப் போராளிகளுக்கு
நினைவுப் படைப்பு

வெளியீடு
11 பிப்ரவரி 1998
அறிவானந்தர் வளாகம்

இரஞ்சிதம் பதிப்பகம்
7/91. வாணி நகர்,
தாராபுரம்.



# இந்திய விடுதலைப் போரும், தந்தை பெரியாரும்.

### விடுதலை வரலாற்றில் தமிழரின் நிலை:

ஆங்கிலேயர் ஆட்சியில் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டு காலம் அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய நாடு விடுதலை பெற்று, இந்தியாவின் சுதந்திரப் பொன் விழாவினை நமது இந்திய நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடி வருகிறோம்.

இந்தியாவின் பொருளாதார வளத்தைக் குறிவைத்து இங்கு வந்து, உலக் வரலாற்றுப் போக்கில், சாதிக்கொரு நீதி கூறும் இந்துமத வர்ணாச்ரம தர்மப்பிடியில் சிக்கி பல நூற்றாண்டு காலம் தேக்கமடைந்து, இருண்ட காலத்தில் மூழ்கிக் கிடந்த இந்திய ஆட்சியாளர்களின் ஆட்சியதிகாரத்தையும் கைப்பற்றி, தங்கள் ஆட்சியில் சமுதாய நிலையில் சமத்துவ ஒளியினை ஏற்றிவந்தபோதிலும் கூட, அரசியல் பொருளாதார நிலையில் இந்திய மக்களை, அடிமைப்படுத்தி இந்திய நாட்டின் பொருளர்தாரம் அனைத்தையுமே சுரண்டி வந்த ஆங்கிலேயரிடமிருந்து அரசியல், பொருளாதர்ர நிலையிலும் சமத்துவம் பெற்றிட பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்து, உயிர்ப்போராட்ட்ங்களைத் தொடர் போராட்டங்களாக நடத்தி இந்திய நாடு விடுதலை பெற்று இன்று அய்ம்பது ஆண்டுகாலம் ஆகிவிட்ட்து.

இவ்விடுதல்லப் போராட்டத்தில், ஒவ்வொரு காலகட்டத்திலும் முன்னோடிகளாகத் ,திகழ்ந்து சர்வபரித்தியாகம் செய்து தங்களை அழித்துக்கொண்ட, விழுப்புண்ணினைப் பெற்ற வீர மறவர்களை ஈன்று தந்தது

தமிழகமேயாயினும் இந்திய விடுதலைப் போரின் வரலாற்றில் தமிழ் நாட்டிற்கும், தமிழ் நாட்டின் விழுப்புண் வீர மறவர்களுக்கும் உரிய மரியாதை இன்றுவரை வழங்கப்படவில்லை. வாள் பிடித்து வாழ்ந்து வந்த வீரத் தமிழர்களின் வழிவந்த இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் புற்றீசல் போல், தலையெடுத்து வரும் சந்தர்ப்பவாதிகள் மானங்கெட்டு சுயநலம் ஒன்றையே கொள்கையாகக் கொண்டு அடிக்கடி கட்சிமாறி தங்கள் காட்சிகளையும் மாற்றிக்கொண்டு பிறரின் கால் பிடித்தும், அவர்தம் வால்பிடித்தும் மானமற்ற வாழ்வு வாழக் கற்றுக் கொண்டதால் வரலாற்றில் தமிழ்ச் சமுதாயத்திற்கு உரிய மரியாதை கிடைக்காமல் போனதைப் பற்றி யாருக்கும் நினைக்கவும் நேரமில்லை.

இந்திய விடுதலைப் போரின் வீர வரலாற்றில் தமிழர்களின் வீரத் தியாகங்கள் அற்பமாகக் கருதி புறக்கணிக்கப்பட்டு, அதே நேரத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி வீரர்களாகவும், தியாகத்தின் திரு உருவங்களாகவும் காட்டப்பட்டு வருபவர்கள் அனைவரும் வட இந்தியத் தலைவர்களேயாவர். அதற்குக் காரணமே, இந்திய வரலாறு என்றாலே அது வட இந்திய வரலாறுதான் என்ற மனப்பான்மை நம்மிடையே ஆழமாக உருவாக்கப்பட்டுவிட்டதேயாகும்.

## விடுதலைப் போரின் முதல் முழக்கம்:

இந்தியப் பெருநாட்டில் ஆங்கிலேயரின் வல்லாண்மையை எதிர்த்து, கப்பம் கட்ட மறுத்து, உரிமைப் போரின் வீர முழக்கத்தினை முதன் முதலில் தொடங்கிய மான மறவர்கள் தமிழ் நாட்டின் மன்னர்களேயாவர். வட இந்தியாவில் இவ்விடுதலை முழக்கம் கேட்பதற்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, ஆங்கிலேயரினை நடுங்கச்செய்யும் இடி முழக்கமாக விடுதலை முழக்கம் தமிழ்நாட்டில் கேட்கத் தொடங்கிவிட்டது.

தமிழகத்து மறவர் சீமையில் நெற்கட்டுஞ் செவ்வயலின் தீரமிக்க சிறுத்தையாகச் சீறிப் பாய்ந்த வீர மறவன் புலித்தேவன்; பாஞ்சாலத்தின் அஞ்சாத சிங்கமாக, ஆற்றல் கொண்ட அடலேறாகச் சீற்றம் கொண்டு சிலிர்த்தெழுந்த வீரபாண்டிய கட்டபொம்மன்; வெள்ளம் பாயும் கழனியெல்லாம் செங்குருதி பாய்ந்து வீரத்தின் விளை நிலமாகத் திகழ்ந்த செம்மண் சீமையாம் சிவகங்கைச் சீமையின் செவ்வேங்கைப் போத்துகளாகப் பாய்ந்தெழுந்து ஆங்கிலேயரின் தலைகளைக் கிள்ளியெறிந்து பந்தாடிய மருதுபாண்டியர் போன்ற தமிழகத்தின் வீரம் செறிந்த மன்னர்களே இந்திய மண்ணில் ஆங்கிலேயரை எதிர்த்து களம் புகுந்து விடுதலை முழக்கமிட்ட முதல் வீர மறவர்களாவர்.

**வடஇந்திய மன்னர்களின்**
**ஆங்கிலேயர் ஆதிக்க எதிர்ப்பு:**

இந்திய விடுதலை வரலாற்றில் முன்னணியில் நிறுத்தப்படும் வட இந்திய மன்னர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தினை எதிர்க்கத் தொடங்கியது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையப் பகுதியில்தான். அதிலும் அவர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து சமர்க்களத்தில் சந்திக்க முன்வந்தது, பிரிட்டிசாரிடம் பணியாற்றி வந்த இந்திய இராணுவ வீரர்கள் தங்கள் மத உரிமைக்காகப் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து போர் முழக்கமிட்டு களத்தில் இறங்கிய பின்னணியில்தான்.

ஆங்கிலேயரைப் போர்க்களத்தில் சந்தித்த வட நாட்டு மன்னர்களுக்கும் தமிழ்நாட்டு மன்னர்களுக்கும் போராட்டக் களத்தின் நோக்கத்தின் அடிப்படையிலேயே ஒரு வேறுபாடு உண்டு.

நாடு இழப்புக் கொள்கை என்னும் நயவஞ்சகச் சட்டத்தை உருவாக்கி அதனைப் பூதாகரமாகக் காட்டி, ஆங்கிலேயர் வடஇந்திய மன்னர்களின் நாட்டையே அபகரிக்கத் தொடங்கினர். வட இந்திய ஆட்சியாளர் பலரை ஆங்கிலேயர் மன்னர்களாகவே அங்கீகரிக்கவில்லை.

அதனாலேயே வட இந்திய மன்னரில் பலரும் ஆங்கிலேயரைப் போர்க்களத்தில் சந்திக்க வேண்டிய நெருக்கடி மிகுந்த கட்டாய நிலையிலேயே, வேறு வழியின்றி போர்க்களம் புகுந்தனர்.

ஆனால் தமிழ் நாட்டு அரசர்களையே ஆங்கிலேயர் தொடர்ந்து மன்னர்களாகவே ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தனர்; இருப்பினும் அவர்கள் தங்களுக்குக் கட்டுப்பட்ட மன்னர்களே என்பதைக் காட்டிட சிறிதளவேனும் கப்பம் கட்டுமாறு பணித்தனர்.

தமிழினத்து மான மறவர்களின் தன்மானப் போக்கு அதற்கு இடம் தரவில்லை. அவர்கள், பதவியே வாழ்வென்று கந்தி பல்லக்குத் தூக்கும் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பாலான அரசியல்வாதிகளைப் போல் ஆங்கிலேயரின் காலடியில் வீழ்ந்து கிடந்து அவர்கள் இட்ட ஆணைக்கேற்ப கப்பம் கட்டி மானம் கெட்ட வாழ்வை ஏற்றிருந்தால், மகுடம் சூடிய மன்னர்களாகவே தொடர்ந்து வாழ்ந்திருக்க முடியும். ஆனால் வீரம் செறிந்த மான மறவர்களோ எந்த உருவிலும் மாற்றானுக்கு மண்டியிட்டு வாழத் தயாராக இல்லை. அதனால் எழுந்ததுவே தமிழரின் ஆட்சிக்கும், பிரிட்டிசாரின் கம்பெனி ஆட்சிக்கும் உருவான போர்.

ஆங்கிலேயரின் பெரும் படையைத் தீரத்துடன் எதிர்கொண்டு திக்கு முக்காடச் செய்து வீரப்போர் புரிந்த வட இந்திய மன்னர்களின் வீரத்தையும் தீரத்தையும் குறைத்து மதிப்பிடுவது நமது நோக்கமல்ல. இந்திய விடுதலைப் போரின் வரலாற்றில் முன்னணியில் வைக்கப்பட வேண்டியவர்கள் தமிழ்நாட்டின் மன்னர்களேயாவர். ஆனால் அவ்வீர மறவர்களுக்கு இந்திய விடுதலைப் போரின் வரலாற்றில் வழங்கப்பட வேண்டிய உரிய இடம் வழங்கப்படாமல், அவ்வீரர்களின் வரலாற்றினைத் தேடிப்பிடித்து துண்டு துண்டுச் செய்திகளாகவே படித்தறிய வேண்டிய அவல நிலையே நிலவி வருகிறது என்பதனை மிகுந்த வேதனையுடன் சுட்டிக் காட்டுவதற்கேயாகும்.

அது போன்றே, பிரிட்டிசாரிடம் பணியாற்றி வந்த வட இந்திய வீரர்கள் 1857 ல் முழுக்க முழுக்க தங்களின் மதச் சுதந்திரம்' ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து, அண்மைக் காலம் வரை வரலாற்று ஆசிரியர்களால் சிப்பாய்க் கலகம் என்று சுட்டிக்காட்டப்பட்டு வந்த அச்சம்பவமே சமீபகாலமாக இந்தியாவின் முதல் இந்திய சுதந்திரப் போர் எனப் பெருமைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும், ஆனால் ஆங்கிலேயரின் அன்னிய ஆதிக்கத்தினை எதிர்த்து இந்திய இராணுவ வீரர்களால் முதன் முதலாக நடத்தப்பட்ட விடுதலைப் புரட்சிகள் 1806ல் வேலூர்க் கோட்டையிலும் 1809ல் சென்னைக் கோட்டையிலும் (தமிழ்நாட்டின் இராணுவ வீரர்களால்) தன்னலமற்ற முறையில் நடத்தப்பட்ட இராணுவப் புரட்சிகளேயாகும் என்பதையும், இந்திய சுதந்திரப் போரின் வரலாற்று ஏடுகளில் இருட்டடிப்பு செய்யப்பட்டு புதையுண்டு போயிருப்பவற்றினைச் சுட்டிக்காட்டி சுதந்திரப் போரின் வரலாற்று மோசடிகளைத் தோலுரித்துக் காட்டி, வரலாற்றின் உண்மைகளை அனைவரையும் அறியச் செய்வதற்குமே யாகும்.

**இருபதாம் நூற்றாண்டிலும் மறைக்கப்படும் தமிழரின் தியாக வரலாறு:**

சென்ற நூற்றாண்டுகளில் மட்டுமின்றி, இவ்விருபதாம் நூற்றாண்டிலும் விடுதலைப் போரில் சர்வபரித்தியாகம் செய்து தியாகத் தழும்புகள் ஏற்று பல்வேறு வகையான இழப்புகளுக்குள்ளாகி, விடுதலைப் போரின் முன்வரிசையில் நின்றிருப்போரும் தமிழர்களேயாவர். எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயரின் ஆதிக்க எதிர்ப்பில் ஆங்கிலேயரை எதிர்த்து தனது அளவிடற்கரிய செல்வமனைத்தையும் அழித்து, தமிழகத்தின் கடற்பரப்பில் கப்பலோட்டிய குற்றத்திற்காக காராக்கிரகத்தில் தள்ளப்பட்டு வெங்கொடுமைக்குள்ளாகி, சிறைக் கொட்டடிக்குள் மாடுபோல் செக்கினை இழுத்து அன்னியரிடமிருந்து நாட்டினை மீட்டிட பாடுபட்ட தியாகச்

செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.; மனிதாபிமானமற்ற கொடுமைக்காரர்களால் திட்டமிட்டே சிறைக்கொட்டடியில் கொடூரமான தொழுநோய்க்கு உள்ளாக்கப்பட்ட தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவா போன்ற வைரத்திலும் உறுதியான நெஞ்சுரம் கொண்டோரின் தியாகத்தின் தழும்புகளுக்குத் தமிழர்களாகிய நாம் மட்டுமே உரிய மரியாதையைச் செலுத்துகிறோமேயன்றி அவர்களுக்கு இன்றுவரை இந்திய வரலாற்றில் உரிய மரியாதை கிடைத்ததாகச் சொல்லமுடியாது.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி தென்பாண்டிச் சீமையின் ஒரு கோடியில் மிகுந்த செல்வ வளமிக்க குடும்பத்தில் பிறந்து தந்தையைப் போன்றே தானும் ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞராக மிளிர்ந்து, ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பலோட்டுவதில் தன் செல்வம் அனைத்தையும் பொது வாழ்விற்காகத் தத்தம் செய்து செக்கிழுத்த செம்மல் இறுதிக் காலத்தில் வறுமையின்பால் சூழப்பட்டு, எஞ்சிய வாழ்நாளை ஓட்டுவதற்குச் சென்னையில் ஒரு நடைபாதையின் ஓரத்தில் சின்னஞ்சிறியதோர் அரிசிக்கடையை நடத்தி கொடிய வறுமையின் பிடியிலே சிக்கி ஆறுதல் கூறுவதற்குக்கூட யாருமின்றி தன் மீதமுள்ள வாழ் நாளைக் கழித்தார் என்பதனை நம்மில் எத்தனைபேர் அறிவோம்.

இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில் தமிழ் நாட்டின் மிகச் சிறந்த தியாகிகளாக உச்சிமோந்து கொண்டாடப்பட்டு வரும் சிலரும், இந்திய நாட்டு மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலைக்காக அன்றி, இந்திய நாட்டின் மக்கள் சமுதாயத்தையே பிரித்தாலும் சூழ்ச்சி வலையாக சமுதாயத்தில் நிலவி வரும் சாதிகளில், சில சாதியினரின் உடலினைத் தொட்டால் தீட்டு, ஒரு சில சாதியினரின் பேசும் ஒலியினைக் காதால் கேட்டாலே தீட்டு, வேறு சில சாதியினரைக் கண்ணுக்கெட்டிய தொலைவில் கூட கண்ணால் பார்த்தாலே தீட்டு என்பதோடு மட்டுமல்லாது,

மண்டல் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போல், புரதவண்ணார் போன்ற சாதியினர் ஊர்க்கோடியின் எங்கோ ஒரு மூலையில் பன்றி தொழுவத்திலும் கேடாக அமைந்துள்ள பொந்து போன்ற தங்கள் வீடுகளை விட்டு அவர்கள் பகலில் வெளியில் நடமாடினாலே மற்றவர்களுக்குத் தீட்டு என்ற சாதியக் கொடுமைகளைத் தோற்றுவித்து பல்லாயிரம் ஆண்டுகளாக, மாமன்னர்களின் காலம் முதல் அதனையே சாஸ்திரங்களாகவும், யாராலும் எவ்வகையிலும் மாற்ற இயலாத சமுதாயச் சட்டங்களாகவும் பாதுகாக்கப்பட்டு வரும் வர்ணாஸ்ரம தர்மக் கொடுமைக்கு எவ்வகையிலும் அழிவு வந்துவிடாமல் தொடர்ந்து பாதுகாப்பதற்காகவே, அவ்வர்ணாச்ரம தர்மத்திற்கெதிராக மானிட சமத்துவம் கருதி ஆங்கிலேய ஆட்சியாளர். இந்துமத விவகாரங்களில் தலையிடுவதைத் தடுப்பதற்காகவே, முன் குடுமியைச் சிரைத்து, பின் குடுமியை அள்ளி முடித்து, மீசையை மழுக்கென மழித்து தன் சாதிக்கே உரிய வைதீகக் கோலத்துடன், திருநெல்வேலிச் சீமையின் கலெக்டர் ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்ற வர்ணாஸ்ரம தர்மவெறிகொண்ட வாஞ்சிநாதன் போன்றோரேயாவர். தமிழர்களில், வைதீக வெறி கொண்ட வாஞ்சியை வீர வாஞ்சியாகப் புகழ்ந்து கொண்டாடுவோர் வடவேங்கடம் முதல் குமரி வரையிலும் அனந்தம் பேர் இல்லாது போயினும் கடந்த காலத்தின் தங்களின் நிலையையும், சமுதாய நிலையையும் தமிழினத்தின் பாரம்பரிய நிலையினையும் மறந்த சனாதன அடிவருடிகள் சிலரேனும் உண்டு. அவர்கள் எப்பொழுதும் தங்கள் நெஞ்சில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய வரலாற்றுச் செய்தி இது.

**ஆங்கிலேயர் எதிர்ப்பில்**
**வடக்கும் தெற்கும்;**

இந்திய சாதிய அமைப்பின் உச்சாணிக் கொப்பிலிருந்த பார்ப்பனர், தங்களுக்குள் வடக்கு தெற்கு பேதமின்றி ஒருவருக்கொருவர் புரிதலுடன் மிகுந்த ஒற்றுமையோடு வெவ்வேறு அமைப்புகளின் பேரில் வெவ்வேறு முகமூடிகளுடன் வர்ணாச்ரம தர்மத்தைப்

பாதுகாப்பதற்காகவே இந்திய விடுதலைப் போரில் சூழ்ச்சியுடன் பங்கு கொண்டனர். ஆனால் வர்ணாஸ்ரம வெறிக்கு அப்பாற்பட்ட வடநாட்டுத் தலைவர்களுக்கும் தமிழ் நாட்டின் தலைவர்களுக்குமிடையே இந்திய விடுதலைப் போரின் நோக்கிலும், போக்கிலும் பொதுவானதோர் வேறுபாடு நிலவியது.

அன்னியர் ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றி ஆட்சியதிகாரங்களை மீண்டும் கைப்பற்றுவது என்ற ஒன்று மட்டுமே வட இந்தியத் தலைவர்களின் இலட்சியமாக இருந்தது. ஆனால் தமிழ் நாட்டின் தலைவர்களுக்கு அன்னிய ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதோடு, சாதி வேறுபாடற்ற மானிட சமத்துவத்தையும் நிலைநாட்ட இந்துமதத்தின், கொடூரமான வர்ணாஸ்ரம தர்மக் கொடுமையினையும் சேர்த்து எதிர்த்துப் போராட வேண்டிய இக்கட்டான நிலை இருந்தது. அதிலும்கூட இக்கொள்கையில் மற்றெவரைக் காட்டிலும், எந்தவித எதிர்ப்பிற்கும் எப்படிப்பட்ட பழிச்சொல்லிற்கும் அஞ்சாது அச்சுமை முழுவதையும் தன் தோளின் மீது இழுத்துப்போட்டுக் கொண்டு அரசியல் வாழ்வில் தன் காலடிச் சுவட்டை மிக ஆழமாகப் பதியச் செய்து தனது பொது வாழ்வினைத் தொடங்கியவர் தந்தை பெரியாராவார்.

**தமிழகத்தில் பெரியாரிய சகாப்தத்தின் தொடக்கம் :**

தந்தை பெரியார் 1917ல் ஈரோடு நகராட்சியின் தலைவராகப் பதவியேற்கும் பொழுதே ஜில்லா போர்டு, தாலுகா போர்டு, தேவஸ்தானம், அர்பன் பேங்க், வணிகர் சங்கம், விவசாயிகள் சங்கம் போன்ற 28 அமைப்புகளில் அங்கம்பெற்று அவ்வமைப்புகளின் பல்வேறு பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டிருந்தவர். அத்துடன் பல ஆண்டுகளாகக் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் பதவி வகித்துக் கொண்டிருந்தவர். அனைத்திற்கும் மேலாக இந்திய

30386





நிலவியல் பகுதியில் திராவிடம் எனக்குறிப்பிடப்படும் தென்னிந்தியப் பகுதியில் சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிகள் நீங்கிய பிற பகுதிகளில் பெரும்பாலானவற்றை ஒன்றிணைத்து பிரிட்டிசாரின் நேரடி நிர்வாகத்தில் இருந்துவந்த அன்றைய சென்னை மாகாணம் என்ற பெரு நிலப்பகுதியில் விரல்விட்டு எண்ணத்தக்க மிகப் பெரும் செல்வச் சீமான்களில் ஒருவராகவும், பொது வாழ்வில் சிறந்த அனுபவமிக்கவராகவும், அத்துடன் மனிதாபிமான மிக்க தொண்டுள்ளமும், பார்ப்பன மேலாதிக்க வெறுப்பும் கொண்டவராகவும் திகழ்ந்த பெரியார், தனது தொண்டினை விரிவாக்கிடக் கருதித் தன்னை 1919ல் தேசிய நீரோட்டத்தில் (காங்கிரசில்) இணைத்துக் கொண்டார். அகில இந்திய அளவில் காங்கிரசில் காந்திய சகாப்தம் தொடங்கிய காலகட்டத்தில் தான் தென்னிந்தியாவில் சென்னை மாகாணமெனக் குறிப்பிடப்பட்ட திராவிடப் பகுதியில் பெரியாரிய சகாப்தமும் தோன்றத் தொடங்கியது.

**காங்கிரசில் புத்தெழுச்சி :**
**புதிய போராட்டங்கள் :**

தந்தை பெரியார் காங்கிரசில் இணைந்த நாள் முதல் திராவிடத்தின் நிலப் பகுதியெங்கும் காங்கிரஸ் பேரியக்கத்தில் புத்தெழுச்சியும் புதிய வேகமும் ஏற்படத் தொடங்கிற்று. 1920ல் காந்தியாரால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் தமிழகத்தில் பெரியாரின் எழுச்சியால் கனல் பரப்பத் தொடங்கிற்று. மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, நீதிமன்றப் புறக்கணிப்பு போன்றவற்றுடன் காந்தியாரின் ஈரோடு வருகையின்போது தந்தை பெரியாரின் இல்லத்தில் எடுத்த முடிவின்படி கள்ளுக்கடை மறியலும் சேர்ந்து கொண்டது.

> பொதுமய்நல வாழ்வுக்கே வாழ்வு என்று பெயர்
> புரட்சி நடைக்கு மட்டுமே நடை என்று பெயர்
>
> அறிவியக்கம் ஒரு நூறு

**மது ஒழிப்பில்**
**பெரியாரின் தொண்டு:**

கட்குடியாகிய மதுவை அறவே ஒழிக்கக் கருதிய காந்தியார், கள் தரும் மரங்களை வெட்டிச் சாய்ப்பதே மது ஒழிப்பிற்குச் சிறந்த வழி என்று கருதினார். அதனை ஓர் அறிக்கையாகவும் வெளியிட்டார். காந்தியாரின் அறிக்கை வெளியானவுடனேயே வட இந்தியாவில் கள் இறக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த கணக்கற்ற ஈச்ச மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன.

ஈச்ச மரங்களின் பயன் கள் தருவது ஒன்றுதான்; வேறு எதற்குமே பயனற்றவையாகும் அம்மரங்கள். ஆனால் தமிழகத்தில் கள் இறக்குவதற்குப் பயன்படும் தென்னை மரத்தின் பயன்கள் அளவிடற்கரியன. தென்னை மரங்கள் இன்று வரை வீட்டின் பொருளாதாரத்தில் மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரத்திலும் முக்கிய அங்கம் வகித்து வருவதாகும். ஆனால் தந்தை பெரியார் தன்னுடைய கணக்கற்ற இழப்பைப் பற்றி எள் முனையளவும் கவலை கொள்ளாது தனது தோப்பிலிருந்த அய்நூற்றுக்கும் அதிகமான தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார், செயற்கரிய இச்செயல் காந்தியாரையே வியப்படையச் செய்தது.

**தடையைத் தகர்த்த**
**பெண் புலிகள் :**

இந்திய நாடெங்கும் கள்ளுக்கடை மறியல் தொடங்கியபோது, அதிலும் கூட இந்திய நாடு முழுவதிலுமே ஈரோடே முன்னணியில் நின்றது. 144 தடையுத்தரவை மீறியமைக்காகப் பெரியாரும் அவருடைய தொண்டர் பலரும் கைது செய்யப்பட்டு சிறயிலடைக்கப்பட்டமையால், ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலுக்கு அத்துடன் முற்றுப் புள்ளி வைத்து விடலாமென அரசாங்கம் போட்ட கணக்கு தவறான கணக்காக முடிந்தது.



தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டவுடனேயே போராட்டக்களத்தை நோக்கி பெண் புலிகள் இரண்டு சிறிப்பாய்ந்து, தலைமையேற்க வந்தன. அவ்விருவரில் ஒருவர் தந்தை பெரியாரின் துணைவியார் அன்னை நாகம்மையாரும் மற்றொருவர் தந்தை பெரியாரின் சகோதரியார் கண்ணம்மையாரும் ஆவர். அப்போராட்டத்தில் புத்தெழுச்சி புயலாக வீசி பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் தடையை மீறும் நிலை!. இவ்வளவு பேரையும் கைது செய்து சிறையிலடைக்க வாய்ப்பின்றி அரசாங்கம் 144 தடைச்சட்டத்தைத் தானாகவே திரும்பப் பெற்றுக் கொண்டது. இந்திய நாட்டில் பிரிட்டிசாரின் ஆட்சியில் அரசாங்கம் தான் போட்ட ஒரு தடைச் சட்டத்தைத் தானாகவே திரும்பப் பெற்றுக் கொண்ட முதல் சம்பவம் இதுவேயாகும் என்பதால் அன்றைய நிலையில் இச் செய்தி இந்திய நாடெங்கும் பரபரப்புடன் பரவி இந்திய மக்களனைவரையும் வியப்படையச் செய்தது.

**இந்து இதழில்**
**இடம் பெற்ற செய்தி :**

144 தடையுத்தரவினை அரசாங்கம் திரும்பப் பெற்றாலும், மறியல் போர் நிற்காது அன்னை நாகம்மையார்-கண்ணம்மையார் தலைமையில் தீவிரமாகத் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தது. ஒத்துழையாமை இயக்கத்தினை நிறுத்தி அரசாங்கத்திடம் சமாதானம் பேச ஒப்புக்கொண்ட காந்தியாரிடம், கள்ளுக்கடை மறியலையும் நிறுத்தி விட்டால் நல்லது என பண்டித மாளவியா மற்றும் சங்கரன் நாயர் போன்ற காங்கிரசு இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தபோது, அதற்குக் காந்தியார் கூறிய பதில் சாதாரண மக்களை மட்டுமின்றி பத்திரிகையுலகையே வியப்படையச் செய்தமையால 19.01.1922-ஆம் நாளிட்ட இந்து நாளிதழிலும் அச்செய்தி முக்கியமான இடத்தினைப் பெற்றது. கள்ளுக்கடை மறியல் நிறுத்தம் பற்றி பண்டித மாளவியாவிடமும் சங்கரன் நாயரிடமும் காந்தியார் கூறிய பதில் இதுதான். கள்ளுக்கடை

மறியலை நிறுத்துவது என்பது என் கையில் இல்லை, அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. இது பற்றி அவர்களைக் கேட்க வேண்டும் என்றார். அன்னை நாகம்மையார், கண்ணம்மையாரின் போராட்ட உணர்வினை-போர்க் குணத்தினை எந்த அளவிற்குக் காந்தியார் புரிந்து வைத்திருந்தார் என்பதையே அவருடைய பதில் தெளிவாகக் காட்டியது.

**நீதிமன்றப் புறக்கணிப்பும்:**
**பொருளாதார இழப்பும்:**

மது ஒழிப்பிற்காகத் தன்னுடைய தோப்பில் கணக்கற்ற தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்த பெரியார் அத்துடன் நின்றுவிடாமல், பிறரால் சாதாரணமாக நினைத்தே பார்க்க முடியாத மிகப்பெரும் பொருளாதார இழப்பையும் தான் கொண்ட கொள்கைக்காக ஒத்துழையாமையின் போது ஏற்றுக்கொண்டார். பொருளாதார நிலையில் இன்றைய பண மதிப்புடன் ஒப்பிட்டு பார்த்தால் 1921-ல் ஓர் ஆயிரம் ரூபாயின் மதிப்பு என்பதே இன்றைய நிலையில் நம்மை மலைக்க வைக்கக் கூடியதாகும். ஒத்துழையாமை இயக்க அடிப்படையில் நீதி மன்றமும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று காந்தியாரால் அறிவிக்கப்பட்ட கொள்கைக்காக, அப்போது அடமானப் பத்திரங்களின் மூலம் தனக்கு வரவேண்டிய ரூ50/-ஆயிரத்தினை வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து, அவ்வழக்கு நீதி மன்றத்தின் நடவடிக்கையில் இருந்த நிலையில், அவ்வழக்கினைத் தொடர்ந்து நடத்த விரும்பாமல் அம்மிகப் பெரும் தொகையின் இழப்பினைப் பெரியார் மிகச் சாதாரணமாக ஏற்றுக் கொண்டார். பெரியாரின் இப்போக்கினைக் கண்டு அதிர்ச்சியுற்று உள்ளம் துடித்த சேலம் விஜயராகவாச்சாரியார் என்ற வழக்கறிஞர் அவ்வடமானப் பத்திரங்களைத் தன் பெயருக்கு மாற்றி மேடோவர் செய்து தருமாறும், பெரியார் வழக்கு மன்றத்திற்கே வராமலேயே வழக்கு மன்றத்தில் தானே பொறுப்பேற்று வாதாடி அப்பெருந்தொகையினைப் பெற்றுத் தருவதாகவும், அத்தொகையினை ஏற்றுக்கொள்ள



பெரியாருக்கு விருப்பமில்லாது போனாலும் கூட திலகர் சுயராஜ்ய நிதியில் அத்தொகையினைச் சேர்த்துவிடலாமென்றும் பெரியாரிடம் தெரிவித்தார். அதற்குப் பெரியார் நானே வழக்காடுவதும் அதனை உங்களுக்கு மேடோவர் செய்து கொடுத்து வழக்காடச் செய்வதும் ஒன்றுதான் எனக் கூறி உறுதியாக மறுத்துவிட்டார்.

**தீண்டாமை ஒழிப்பு-**
**வைக்கத்தில் போராட்டம்**

1924ஆம் ஆண்டின் காலகட்டம் என்பது சமுதாய நிலையில் புதிய புரட்சிக் கருத்துக்கள் தோன்றுவது என்பதும் அதற்காகப் போராடுவது என்பதும் மனத்தாலும் நினைத்துப் பார்க்க இயலாத இருண்ட காலமாகும். இந்திய நாடெங்கும் சாதியக் கொடுமையும் கொடூரமான தீண்டாமைக் கொடுமையும் தலைவிரித்தாடிய காலகட்டம். அந்நிலையில்தான் கேரளத்தின் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த வைக்கம் என்னும் ஊரில் தீண்டாமைக்கு எதிரான மிகப் பெரும் போர் புரட்சிக் கனலாக வெடித்துக்கிளம்பியது. வைக்கத்திலுள்ள மகாதேவர் கோவிலுக்குள் கூட இல்லை, அக்கோயிலைச் சுற்றியுள்ள தெருவில் கூட தாழ்த்தப்பட்டோர் நடமாட முடியாத கொடூர நிலை. இக்கொடுமையான நிலை கண்டு கொதித்தெழுந்தவர்கள், கேரளத்து காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜார்ஜ் ஜோசப் என்பவரின் தலைமையில் மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் தெரு நுழைவுப் போராட்டத்தினைத் தொடங்கினர். போராட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே போரட்டத்தின் முன்னணியில் நின்ற தலைவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டதால் போராட்டமே நின்றுவிடக் கூடிய அவலநிலை ஏற்படவே அச்செய்தியை அறிந்த, சென்னை மாகாண காங்கிரஸ் கட்சியின் செயலாளராகிய பெரியார் அப்போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்த வைக்கம் நோக்கி உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார்.

**சமஸ்தானத்தின் வரவேற்பும்**
**பெரியாரின் வைக்கம் போராட்டமும்:**

தந்தை பெரியார் செல்வதோ சமஸ்தான ஆட்சியின் வர்ணாஸ்ரம தர்மக் கொடுமையினை எதிர்த்துப் போராட்டம் நடத்த. ஆனால், அங்கு அரசாங்க அதிகாரிகள் புடைசூழ, முன் நின்று தந்தை பெரியாரை வரவேற்றதோ சமஸ்தானத்தின் திவானும் சமஸ்தானத்தின் காவல்துறையினுடைய தலைவரும் ஆவர். காரணம் ஈரோட்டிலுள்ள பெரியாரின் மாளிகையில் பலமுறை விருந்தாளியாகத் தங்கியிருந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மன்னர், பெரியார் தன் அரசாங்கத்திற்கு எதிராக போராடு வதையோ, அவரைத் தனது அரசாங்கம் கைது செய்து சிறையி லடைப்பதையோ விரும்பாமையினாலேயேயாகும். மன்னரின் ஆணைப்படி அரசாங்க அதிகாரிகள் பெரியாரை அரசாங்க விருந்தாளியாக வரவேற்ற போதிலும், பெரியார் அரசாங்கத்தின் விருந்தாளியாகத் தங்கிப் பெருமைப்பட சிறிதும் விரும்பாது அதனைப் புறக்கணித்து போராட்டக் களத்தில் புகுந்து ஒருமாத சிறைத் தண்டனையை ஏற்றார். அத்தண்டனைக் காலம் முடிந்த பின்பும் போராட்டத்தில் அவர் மீண்டும் கலந்து கொள்ளவே அவருக்கு மீண்டும் கிடைத்த தண்டனையோ 6 மாதக் கடுங்காவல்.

**போராட்டக் களத்தில்**
**அன்னை நாகம்மையார் :**

போராட்டம் தொடர்ந்து நடைபெற மீண்டும் நெருக்கடி என்ற செய்தியறிந்ததும் புயலெனப் புறப்பட்டு வந்த அன்னை நாகம்மையார் சமஸ்தானம் முழுவதும் பிரச்சாரச் சூறாவளியைத் தொடங்கினார். போராட்டக் களத்தில் எண்ணற்ற மகளிர் அலை அலையாகக் கலந்து கொள்ளத் தொடங்கினர். போராட்டம் முடியப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்ட அரசாங்கம் பணியத் தொடங்கியது, உடன்படிக்கையும் ஏற்பட்டது, அண்ணல் காந்தியார் தலைமையில்!



## போராட்டத்தில் வெற்றி காந்தியார் ஒப்பந்தம்:

வைக்கம் போராட்டம் வெற்றியின் விளிம்பைத் தொட்டதுமே அப்பெருமை பெரியாரைச் சென்றடைந்துவிடக் கூடாது என்பதற்காகவே, ஆரம்பம் முதலே 'வைக்கம் போராட்டமே தவறு' எனக் கண்டித்து எழுதி வந்த காந்தியாரையே அப்போராட்ட வெற்றியின் பெருமையை அடையச் செய்யக் கருதி மிகச் சூழ்ச்சியாக இராஜாஜி முதலானோர் அப்போராட்டத்தின் முடிவில் உருவான ஒப்பந்தத்திற்குத் தலைமையேற்க காந்தியாரையே அழைத்து வந்தனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காந்தியார் ஏட்டளவில் அப்பெருமையினைப் பெற்றாலும் நாடு போற்றும் வைக்கம் வீரராகப் பெரியார் வெற்றியுடன் ஈரோடு திரும்பினார். இப்போராட்டத்தின் சாதனையே 1927ல் மகார் குளத்தில் தான் நடத்திய போராட்டத்திற்கு வழிகாட்டியாக, ஊக்க சக்தியாக இருந்ததாக டாக்டர் அம்பேத்கார் மிகப் பெருமையுடன் குறிப்பிடுகின்றார்.

## சேரன்மாதேவி குருகுலப் போராட்டம் :

சுதந்திரப் போராட்டத் தியாகி என்றும் தமிழ் இலக்கிய உலகில் சிறுகதையின் முன்னோடியென்றும் இன்றுவரை (சிலரால்) தலைக்கு மேல் தூக்கிவைத்து ஆடப்படுகின்ற வ.வே.சு அய்யர் எவ்வளவு பெரிய சாதிவெறியர் என்பது, அவரைப் போன்றோர் காங்கிரசில் இணைந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதன் நோக்கமே, தீண்டாமைக் கொடுமையைக் கட்டிக்காக்கும் வர்ணாஸ்ரம தர்மத்தைப் போற்றிப் பாதுகாக்கவேயாகும் என்பதும், அவர் நடத்திய (சேரன் மாதேவி) குரு குலத்தில் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டபோது தந்தை பெரியார், திரு.வி.க, வரதராஜுலு நாயுடு போன்ற எண்ணற்ற பார்ப்பனரல்லாத காங்கிரசுத் தலைவர்கள் கொதித்தெழுந்தனர். சேரன் மாதேவி குரு குலத்தில் பார்ப்பனப் பிள்ளைகளுக்குக்

குருகுலத்தின் உட் கூடத்தில் சூடான சோறும், பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு வெளித் தாழ்வாரத்தில் பழைய சோறும் போடப்படுவதையும், குருகுலத்தில் மாணவர் தங்கும் விடுதியிலிருந்து இறை வழிபாட்டுக் கூடம் வரையிலும், குருகுலத்தின் நடவடிக்கை ஒவ்வொன்றிலும் கடுமையாகத் தீண்டாமை பின்பற்றப் படுவதையும், இக்கொடுமை பற்றி காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாதாரின் மனக் குமுறலையும் அறிந்த காந்தியாரே அதிர்ச்சியடைந்து, வர்ணாஸ்ரம தர்மமெனும் தீண்டாமைக் கொடுமையை நிறுத்துமாறு கூறியும் வ.வே.சு அய்யரோ குருகுலத்தின் கட்டுப்பாடு என்பது வர்ணாஸ்ரம தர்மத்தின் மூலம் கட்டிக்காக்கப்பட வேண்டுவதே முக்கியமெனக் கூறி, தனது வர்ணாச்ரம தர்மமெனும் வெறிப் போக்கினை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார். இதனையறிந்து கொதித்தெழுந்த பெரியார், அய்யரின் குருகுலத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தினை நடத்தினார். தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டால்தான் குருகுலத்தினை நடத்த முடியும் என்பதனை உணர்ந்த வ.வே.சு அய்யர், தனது உயிரினும் மேலான வர்ணாஸ்ரம தர்மத்தினைக் கைவிட்டு குருகுலத்தை நடத்திட விரும்பாது, குருகுலத்தையே இழுத்து மூடிவிட்டார். தந்தை பெரியாரின் போராட்டத்தால் வ.வே.சு. அய்யரின் சாதிவெறிக்கு மரண அடி கொடுக்கப்பட்டது.

**இந்திப் பிரச்சாரமும்,**
**கதர்ப் பிரச்சாரமும் :**

இந்திய தேசியத்தின் இணைப்பினை, மொழி வழியாகவும் கொண்டுவர வேண்டுமெனக் கருதிய காந்தியார், இந்தி பேசாத மாநிலத்தினரும் இந்தி மொழி கற்றுக்கொள்ள வேண்டுமெனக் கருதினார். காந்தியாரின் கருத்தை அறிந்த பெரியார் தமிழ் நாட்டில் இந்தி மொழியினைப் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டு உடனடியாகச் செயற்பாட்டிலும் இறங்கினார். தமிழ் நாட்டின் முதல் இந்திப் பிரச்சார சபையினை ஈரோட்டில் தன்னுடைய கட்டடத்திலேயே

தோற்றுவித்தார். அப்பிரச்சார சபையினைப் பண்டிதர் மோதிலால் நேருவை அழைத்து வந்து தொடங்கச் செய்தார்.

அது போன்றே, காந்தியார் கடைப்பிடித்துவந்த கதராடைத் திட்டத்தினைக் காங்கிரசுடன் இணைந்த திட்டமாக மாற்றி, அதுரையிலும் தனியாரால் நடத்தப்பட்டு வந்த கதர் வஸ்திராலயங்களைக் காங்கிரஸ் கட்சியே பொறுப்பேற்று நடத்தும் வகையில், ஈரோட்டில் காங்கிரஸ் கட்சியின் சார்பில், தன் சொந்தச் செலவிலேயே கதர்க்கடையைத் தொடங்கினார். அத்துடன் தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களில் எல்லாம் கட்டடங்களை விலைக்கு வாங்கி கதர்க்கடையை உருவாக்கினார்.

தமிழ் நாட்டிலுள்ள கதர்க்கடைகளை ஒன்றிணைத்து, கதர் போர்டு ஒன்றினை உருவாக்கி அக் கதர் போர்டிற்கு அய்ந்து ஆண்டுகள் தலைவராக இருந்து தொண்டாற்றினார். அப்பொழுது மக்களிடையே கதராடையினைப் பரவச் செய்ய கதர்த் துணியினை மூட்டையாகக் கட்டிக் கொண்டு முதுகில் வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்தார்.

கதர்ப்பிரச்சாரத்திற்கெனவே; இராஜாஜியின் பொறுப்பில் திருச்செங்கோட்டில் ஓர் ஆசிரமத்தினையும் தொடங்கச் செய்தார். தானே சென்று நாடு முழுவதும் தீவிரக் கதர்ப் பிரச்சாரம் செய்து வந்தபோது சென்னையில் அவர் ஆற்றிய அனல் தெறிக்கும் சொற்பொழிவிற்காக ராஜதுவேஷம், வகுப்பு துவேஷம் ஆகிய குற்றச்சாட்டுகளின் மீது 11.09.24ல் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

பெரியார் கதராடைப் பிரச்சாரத்துடன் நிற்காமல் அன்றாடம் தானே நூல் நூற்கும் பணியில் இடைவிடாது நீண்ட நேரம் ஈடுபட்டதால் கையில் கடுமையான வலி ஏற்பட்டு அவ்வலியால் நீண்ட நாட்கள் துன்பப்பட்டார். இதனையறிந்து வேதனைப்பட்ட காந்தியார், நீங்கள் ராட்டையை அதிக நேரம் சுழற்றியதால் இந்த வலி

ஏற்பட்டிருக்கலாம். ஆகையால் வலி குறையும் வரை சிறிது காலத்திற்கு இராட்டையைச் சுழற்றுவதை நிறுத்தி வையுங்கள் என வேண்டுகோள் விடுத்து தந்தை பெரியாருக்குக் கடிதம் எழுதினார்.

தந்தை பெரியார், தான் எந்தக் கொள்கையை முழுமையாக விரும்பி ஏற்றுக்கொண்டாலும், அது தொடர்பான செயற்பாடுகள் எதுவானாலும் உடல் உழைப்பு பற்றியோ, பொருள் இழப்பு பற்றியோ, சுய கௌரவம் பற்றியோ எப்போதும் கவலை கொண்டாரில்லை. தலைமை இடும் கட்டளையைக் கண்மூடிப் பின்பற்றுவதையே ஒரு தொண்டனுக்குரிய இலக்கணமாகக் கொண்டிருந்தார். அதுவே ஒரு இயக்கத்திற்கும் அதன் கொள்கைக்கும் வெற்றியினைத் தரும் எனக் கருதினார். அதனால்தான், அவர் தனக்கென தனி இயக்கம் கண்ட பின்புகூட, ஒரு தொண்டனுக்குரிய இலக்கணம் எப்படி இருக்க வேண்டுமெனப் பின்கண்டவாறு வரையறுத்துக் கூறினார்.

"நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவை, உங்கள் மனச்சாட்சி என்பதைக் கூட நீங்கள் கொஞ்சம் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேருமுன்பு நீங்கள் உங்கள் பகுத்தறிவைக் கொண்டு, கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம். உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்றும், என்னுடைய தன்மை எப்படிப்பட்டது என்றும், நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆர, அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம்!

ஆனால், எப்போது உங்கள் மனச்சாட்சியும் பகுத்தறிவும் இடங் கொடுத்து நீங்கள் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ, அப்போதிலிருந்து உங்கள் பகுத்தறிவையும், மனச்சாட்சியையும் ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, கழகக் கோட்பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான் முறை.

ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து, அந்தப் பெட்டியைக் கொஞ்சம் எடப்பா என்று கூறினால் என் மனச்சாட்சி அதற்கு அனுமதிக்கவில்லையே என்று கூறினால் அது முறையாகுமா? ஒரு டிஸ்ட்ரிக் சூப்ரண்டென்டெண்ட் சுடு என்று போலீஸ்காரனுக்கு உத்தரவு போட, அவன் என் மனச்சாட்சி அதற்கு இடங்கொடுக்க வில்லையே என்று கூறினால், அந்த சூப்ரண்டென்டெண்ட் கதி என்னாவது? கசாப்புக் கடையில் வேலை பார்க்க ஒப்புக்கொண்டவன், அந்த ஆட்டை வெட்டுடா என்று எஜமான் உத்தரவு விடும்போது, அய்யோ! என் மனச்சாட்சி மாட்டேன் என்கிறதே; நான் என்ன செய்யட்டும்? என்று கூறினால், ஏன்டா மடப்பயலே! முன்னாடியே உனக்கு இது தெரியாமற் போனதேனடா? அப்போது உன் மனச்சாட்சி எங்கேயடா போயிருந்தது? என்று கேட்பானா, இல்லையா, அவனை?

ஆகவே, மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ கழகக் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுக்குமானால், உடனே விலகிக் கொள்வதே முறையே ஒழிய, உள்ளிருந்து கொண்டே குதர்க்கம் பேசித் திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்'' என ஒரு தொண்டனுக்கு இருக்க வேண்டிய இலக்கணத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

### இந்திமொழி ஆதிக்க எதிர்ப்பும் கதர்த்திட்ட எதிர்ப்பும் :

இந்தி மொழி ஒன்றே இந்திய அரசின் ஆட்சி மொழியெனவும், இந்திய நாட்டின் இணைப்பு மொழி என்ற நிலையும்; இந்தியே இந்தியாவின் முன்னுரிமை பெற்ற மொழி, இந்தியினைத் தாய்மொழியாகக் கொண்டோரே இந்திய நாட்டில் எல்லா வகையான வாய்ப்பும் பெற்ற முதல் நிலைக் குடிமக்கள் என்ற நிலையும் தோன்றத் தொடங்கியதுமே, தந்தை பெரியார் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துக்

கடுமையாகப் போராடத் தொடங்கினார். 1937ல் மாநிலங்களின் மும்மொழித் திட்டத்திற்கு வித்திட்டு இராஜாஜியால் கல்விக் கூடங்களில் புகுத்தப்பட்ட கட்டாய இந்தி மொழிப் பாடத்தினையும் கடுமையாக எதிர்த்தார். தமிழகமே போர்க்கோலம் பூண்டது! இந்தி மொழிப் போராட்டக்களத்தில் தமிழர் எண்ணற்றோர் சிறைபுகுந்து கடுமையான கொடுமைக்கு உள்ளாகினர். அக்கொடுமையால் பலர் உயிரிழந்தனர்.

தமிழர்களை வெங்கொடுமைக்குள்ளாக்கிய முதலமைச்சர் இராஜாஜி கைகொட்டி எள்ளி நகையாடினார். கழகத்தின் காளைகள் குடந்தைநகரின் தாளமுத்து மற்றும் சென்னை நடராசன் போன்றோரின் தியாகத்தால் இந்தி எதிர்ப்புக்கனல் அணையாது சுடர்விட்டு வந்து, 1965ல் தமிழகத்தில் மிகப் பெரும் பிரளயத்தையே உருவாக்கியது. தமிழகத்தில் கட்டாயக் கல்வியாகப் புகுத்தப்பட்ட இந்தி மொழி என்னும் நச்சுப் பாம்பு தந்தை பெரியாரின் போராட்டத் தடி கொண்டு 1940லேயே விரட்டப்பட்டபோதிலும் விருப்பப்பாடம் என்ற வேடத்துடன் டெல்லியில் தலையை வைத்து தமிழகத்தில் தன் வாலினை நீட்டிக்கொண்டு நஞ்சினைக் கக்கிவந்த இந்தி மொழியெனும் நச்சுப்பாம்பு பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் தமிழ் நாட்டைவிட்டே விரட்டியடிக்கப்பட்டு, தமிழ் நாடு இன்று, உலகின் மொழி அறிஞர் பலராலும் உயர் தனிச் செம்மொழி எனப் போற்றப் பட்டுவரும், என்றும் கன்னித் தமிழாய் விளங்கிவரும் நம் தாய் மொழிக் கல்வியுடன் இந்திய நாட்டின் இணைப்பிற்கு மட்டுமல்லாது, உலகநாடுகளின் இணைப்பிற்கும் சேர்த்து ஆங்கிலக் கல்வி என்ற இரு மொழிக் கொள்கை கொண்ட மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது.

இந்திமொழிப் பிரச்சாரத்தினைத் தொடங்கிய தந்தை பெரியாராலேயே இந்தி மொழி ஆதிக்கம் எதிர்க்கப்பட்டதைப் போன்றே, தமிழ் நாட்டில் பெரியாரால் மகத்துவம் பெற்ற கதர்த்திட்டமும், பெரியாராலேயே கடுமையாக எதிர்க்கப்பட்டது.

**கதர் போர்டு நிர்வாகத்தில்**
**பார்ப்பனர் ஆதிக்கம்:**

காங்கிரஸ் இயக்கம் போன்றே, கதர்த்திட்டமும் அதன் நிர்வாகங்களும் பார்ப்பனர்களால் கபளீகரம் செய்யப்பட்டு, பார்ப்பனர் ஆதிக்கமே அதிலும் மேலோங்கியதாலும், கதராடை என்பது பார்ப்பன வைதீகக் காங்கிரசின் சின்னமாகத் திகழத் தொடங்கியதாலும், கதர்த் திட்டமே தந்தை பெரியாரால் மிகக் கடுமையாக எதிர்க்கப்படும் அவல நிலைக்கு உள்ளானது. கதர் நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் எவ்விதம் பார்ப்பனர்களுக்கே பயன்படத் தொடங்கியது என்பதைக் கூறும் பெரியார், கதர் போர்டு நிர்வாகத்தில் நான் தலைவராக இருந்தபோதிலும், கே.சந்தானம் என்ற பார்ப்பனர் காரியதரிசியாக இருந்ததால், கதர் போர்டு பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கே பயன்பட்டுவந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**காங்கிரசில் இணையும்போது**
**பெரியார் விதித்த நிபந்தனை :**

காங்கிரசில் சேருவதற்கு முன்னதாகவே, ஆரம்பம் முதலே மிகப்பெரிய மனிதாபிமானியாகத் திகழ்ந்த தந்தை பெரியார், இந்திய சமுதாயத்தில் மனித சமத்துவத்தை உருவாக்குவதற்கான சரியான வழிமுறைகள் பற்றி தெளிவாகச் சிந்தித்து பாரம்பரியமாக சாஸ்திரத்தின் வாயிலாகவும் அதனால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் வாயிலாகவும் அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரமும் கல்வி வாய்ப்பும், அரசுத் துறையின் வேலை வாய்ப்பும் முழுக்க முழுக்க ஆதிக்க சக்திகளான பார்ப்பனர் கையிலும் அதற்கடுத்த நிலையில் இருந்து வரும் மேல் சாதியினர் கையிலுமே இருப்பதை உணர்ந்தார். எனவே அரசியல் மற்றும் ஆட்சி அதிகார வாய்ப்பும் கல்வி வாய்ப்பும், வேலை வாய்ப்பும் தாழ்த்தப்பட்டோர் உட்பட எல்லா சாதியினருக்கும் அவரவர் சாதி எண்ணிக்கைக்குத் தக்கவாறு சமத்துவமாக்கப்.

படவேண்டும் என உணர்ந்தார்; இந்துமதத்தின் சாதி தர்மமாகிய (வர்ணாஸ்ரம தர்மத்தை) உடைத்தெறியும் சம்மட்டி வகுப்புவாரி உரிமை ஒன்றேயாகும் என்பதைப் பறையறைந்து கூறினார். இக் கருத்தினைக் காங்கிரஸ் தலைவர்களிடம் முன் நிபந்தனையாக வைத்தே தந்தை பெரியார் காங்கிரசில் இணைந்தார். புரட்சிக் கருத்துகள் அனைத்தையுமே இந்து மதம் சூழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு கால ஓட்டத்தில் நீர்த்துபோகச் செய்து விடுவதைப் போன்றே பெரியாரின் வகுப்புரிமை கருத்தையும் நீர்த்துப் போக வைத்துவிடலாம் என்ற சூழ்ச்சியோடுதான் இராஜகோபால ஆச்சாரியார் போன்றோர் பெரியாரின் கருத்திற்கு மகிழ்வுடன் ஒப்புதல் தெரிவித்து, தமிழ் நாட்டின் செல்வச் சீமான்களில் ஒருவரும், சமுதாயத்தில் தனிப்பெரும் அந்தஸ்து மிக்கவரும், ஈரோட்டின் நகராட்சித் தலைவரும், ஒப்பற்ற உறுதிமிக்க சமூகத் தொண்டருமாகிய பெரியார், எப்படியேனும் காங்கிரசில் சேர்ந்துவிட்டால் போதும் எனத் திட்டமிட்டுப் பெரியாரைக் காங்கிரசுப் பேரியக்கத்தில் இணைத்துவிட்டனர். பெரியார் காங்கிரசில் இணைந்தது மட்டுமல்ல காங்கிரஸ் பேரியக்கத்தில் அவர் இருந்தது வரை சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் அவரை மையப்படுத்தியே இயங்கி வந்தது. பெரியார் காங்கிரசில் இணைந்தது முதல் காங்கிரசை விட்டு வெளியேறும் வரை அவரே சென்னை மாகாண காங்கிரசின் தலைவராகவும், செயலராகவும் மாறி மாறிப் பொறுப்பினை வகித்து வந்தார்.

**காங்கிரஸ் மாநாட்டில்**
**வகுப்புரிமைத் தீர்மானம் :**

பெரியார் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்த 1919ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலேயே, காங்கிரஸ்தலைவர்களிடம் தான் முன் நிபந்தனையாக வைத்த கருத்தினைத் தீர்மானமாக நிறைவேற்றிடக் கருதி வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார். ஆனால் காங்கிரசார் தாங்கள் முன்

நிபந்தனையாக ஏற்றுக்கொண்ட கருத்தைத் தங்களுக்கே உரிய சூழ்ச்சியுடன் மாநாட்டுத் தீர்மானமாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அடுத்த மாநாட்டில் தீர்மானமாக்கலாம் என தங்களுக்கே உரிய வஞ்சகத்துடன் சாக்குபோக்கு கூறி பெரியாரைச் சமாதானப்படுத்திவிட்டனர். பின்னர் 1920 நெல்லை மாநாட்டிலும், 1921 தஞ்சை மாநாட்டிலும், 1922 திருப்பூர் மாநாட்டிலும், 1923 மதுரை மாநாட்டிலும், 1924 திருவண்ணாமலை மாநாட்டிலும் தந்தை பெரியார் தனது வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தும் வர்ணாஸ்ரம தர்ம வெறி கொண்டோர் அதனை அலட்சியப்படுத்தியே வந்தனர். போர்க் குணம் கொண்ட பெரியார் இறுதியான முடிவோடு 1925 காஞ்சி மாநாட்டிலும் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அம் மாநாட்டின் தலைவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க தான் என்றாலும் அவராலும் காங்கிரசிலுள்ள பார்ப்பனர் ஆதிக்கத்தினை உடைத்து அத் தீர்மானத்தை முன்மொழிய ஒப்புதல் அளிக்க இயலவில்லை. காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக யார் வீற்றிருந்தாலும் பார்ப்பன ஆதிக்க சக்திகளுக்குக் கட்டுப்பட்டே, சூழ்நிலையின் கைதியாகவே வீற்றிருக்க முடிந்தது. அகிம்சாவாதியான திரு.வி.க மட்டிலும் அதற்கு விதிவிலக்காக நடந்துவிட முடியுமா-என்ன?

**பெரியாரின் சூளுரையும்,**
**காங்கிரசிலிருந்து வெளியேறலும் :**

பெரியார் பார்ப்பனர் சூழ்ச்சியைக் கண்டு எரிம்லையானார். அந்த மாநாட்டுப் பந்தலிலேயே பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டைக் கூட்டினார். அதில் , காங்கிரசை ஒழிப்பதே இனி என் வேலை என்ச் சூளுரைத்து காங்கிரசை விட்டு வெளியேறினார். அன்று தோன்றியதே, இந்திய மக்களின் அரசியல், பொருளியல் சுதந்திரத்தைக் காப்பதற்காக மட்டுமல்லாது இந்து மத சாதி ஆதிக்க வர்ணாஸ்ரம தர்மத்தை ஒழித்துக் கட்டுதல் மூலம் சமுதாய சமத்துவத்தை உருவாக்குதல் உள்ளிட்ட நாட்டின் உண்மையான விடுதலைக்கு வித்திட்ட சுயமரியாதை இயக்கம்.

**பெரியாரைக் காங்கிரசில் மீண்டும் இணைக்க காந்தியார் முயற்சி:**

பெரியாரை எப்படியேனும் மீண்டும் காங்கிரசில் இணைத்துவிட வேண்டும் எனக்கருதிய காந்தியார் 1927ல் தந்தை பெரியாரைப் பெங்களூருக்கு வரவழைத்துப் பேசினார். தந்தை பெரியாரோ காங்கிரஸ் என்பது பார்ப்பன ஆதிக்கக் கூடாரமாவே இருக்கின்றது. காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் எல்லோருமே வர்ணாஸ்ரம தர்மத்தைக் காப்பதற்கே காங்கிரசைப் பயன்படுத்திக் கொள்ளும் வஞ்சகம் மிக்க சூழ்ச்சிக்காரர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர்கூட விதிவிலக்கு இல்லை என்ற கருத்தினைத் தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார். பெரியாருக்கு மறுமொழி கூற முடியாத காந்தியார், பார்ப்பனர்களில் ஒருவர்கூட நல்லவர் இல்லையென்று கூறுகிறீர்களா? எனக்கேட்டார். தந்தை பெரியார் ஆமாம் என மிக உறுதியாகக் கூறியதும் காந்தியார் நீண்ட நேரம் யோசித்துவிட்டு ஏன் கோகலே இல்லையா என்றார். காந்தியார் கோகலேயை எடுத்துக் காட்டாகக் கூறியதற்குக் காரணம் காந்தியாரின் அரசியல் குரு அவர்தான். அந்தப் ப்ாசத்திலேயே அவ்வாறு கோகலேயைக் குறிப்பிட்டார் என்பது தந்தை பெரியாருக்கும் தெரியும் என்ற போதிலும் அதைக் கூறி மீண்டும் வாதத்தை வளர்த்த விரும்பாமல், "நீங்களோ மகாத்மா , உங்கள் கண்ணுக்கே இந்த அகில இந்தியாவில் கோகலே ஒருவர்தான் தெரிகின்றார். நானோ வெறும் ஆத்மா , என் கண்ணுக்கு ஒருவருமே படவில்லை. பார்ப்பனர் எவரையும் நான் நம்பத் தயாராக இல்லை" எனக் கூறி விவாதத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

இருப்பினும் எவ்வகையிலும் பெரியாரை மீண்டும் காங்கிரசில் இணைத்துவிட வேண்டும் என்ற கருத்தில், ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஈரோட்டில் பெரியாரின் இல்லத்திலேயே சந்தித்துப் பேசிப்பார்த்தார். அத்தோடு மட்டுமின்றி இராஜாஜியும் பலமுறை முயன்று பார்த்தார். தந்தை பெரியாரோ காங்கிரசால் இந்தியாவில் ...



அனைத்துத்தரப்பு மக்களுக்குமான உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுத் தர முடியாது என்ற கருத்தில் உறுதியாக இருந்தார். "ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கிலேயன் என்னுடன் கை குலுக்குகிறான். எனக்குப் பக்கத்து வீட்டில் இருக்கும் பார்ப்பான் என்னைத் தொட்டால் குளிக்க வேண்டும் என்கிறான். எனவே எனக்குப் பார்ப்பான்தான் அன்னியனேயொழிய ஆங்கிலேயன் எனக்கு அன்னியனல்ல" எனக் கூறி காங்கிரசில் மீண்டும் சேர மறுத்ததோடு, காங்கிரசை ஒழிப்பதே இனி என் முதல் காரியம் ஆகும் எனவும் பிரகடனப்படுத்தினார். தந்தை பெரியாரின் இம்முடிவு கண்டு அஞ்சியோர், வஞ்சகமாகப் பெரியார் ஒரு துரோகி என்றும் ஆங்கிலேயரின் அடிவருடி என்றும் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். பெரியாரோ அதுபற்றி சிறிதும் கவலைகொள்ளவில்லை. ஆனால் காங்கிரசை விட்டு அவர் வெளியேறிய போதிலும் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்ப்பதையும் நிறுத்தவில்லை.

**இங்கிலாந்து நாட்டில்,**
**பெரியாரின் முழக்கம் :**

பெரியார் தனது உலகச் சுற்றுப்பயணத்தின் போது 20.06.32 அன்று இங்கிலாந்து நாட்டின் மெக்ஸ்பரோலேக் பார்க்கில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கூடியிருந்த கூட்டத்தில் பேசியபோது, இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம், ஆனால் நாங்கள் உங்கள் பிரிட்டிஷ் ஆட்சியை மிகமிகப் பரிகசிக்கத்தக்க விஷயமாய்க் கருதுகின்றோம் என முழங்கினார்.

> ஆபாசம் விற்பவன் கொலைகாரன்
> ஆபாசம் படிப்பவன் அடிமுட்டாள்
> ஆபாசம் எழுதுகிறவன் அயோக்கியன்
>
> அறிவாளி

## விடுதலை வேங்கை பகத்சிங்கிற்கு வாழ்த்து :

இந்தியப் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசியதற்காக மாவீரன் பகத்சிங்கும் அவனுடைய தோழர்கள் சுகதேவ், ராஜகுரு ஆகியோரும் 1931ல் தூக்கிலிடப்பட்டபோது காந்தியார் முதல் இந்திய நாட்டின் எந்தவொரு தலைவரும் அதுபற்றி கருத்தினைக் கூறி சிக்கலில் மாட்டிக்கொள்ள விரும்பாது மௌனம் காத்தபோது, அவர்களைப் பாராட்டி தன்னுடைய இதழில் பெரியார் தலையங்கமே எழுதினார். இந்திய நாட்டின் புரட்சிக்காகவே தோன்றியதாகக் கூறிக்கொண்ட பத்திரிகைகளுக்கும்கூட இந்தத் துணிவு வரவில்லை என்கின்றபோது பெரியாரின் செயல்பாடு எந்த நிலையிலும் அவரின் துணிவுமிக்க உறுதியான நெஞ்சத்தின் தன்மையையே காட்டுவதாக உள்ளது.

## இதழுக்குத் தடையும் தண்டனையும் :

அதோடு மட்டுமின்றி 1925ல் காங்கிரசை விட்டு வெளியேறிய பெரியார் 1933ல் 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலையங்கத்தின் மூலம் பிரிட்டிஷ் ஆட்சியாரின் வஞ்சகப் போக்கினை அம்பலப்படுத்தினார். இத்தலையங்கத்திற்காகக் குடிஅரசு இதழ் தடை செய்யப்பட்டதோடு, பிரிட்டிஷ் அரசாங்கம் பெரியாருக்கு 9 மாதம் சிறைத் தண்டனையும், ரூ.300/-அபராதமும் விதித்தது. அவருடைய சகோதரியார் கண்ணம்மையாருக்கு (குடியரசு இதழின் பதிப்பாளர் என்ற முறையில்) 6 மாத சிறைத் தண்டனையும் ரூ.300/- அபராதமும் தண்டனையாக வழங்கியது. தந்தை பெரியார் அதற்கெல்லாம் சிறிதும் அஞ்சாது ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தே வந்தார். அதே நேரத்தில் பிரிட்டிசார் கைக்கொண்ட சாதிவேறுபாடற்ற சமூக நீதியினைத் தனது எழுத்திலும், பேச்சிலும் மனதாரப் பாராட்டியும் வந்தார்.



## பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை முழக்கம் :

இந்திய விடுதலைக்குச் சில ஆண்டுகட்கு முன்பு திருப்பத்தூர் மாநாட்டில், ''வர்ணாஸ்ரமம் இருக்க வேண்டும், சாதி இருக்க வேண்டும், ராஜாக்கள் இருக்க வேண்டும்; வேதம், புராணம், இதிகாசம் இருக்க வேண்டும்; இன்றைக்கு இருக்கின்ற எல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இவற்றை எல்லாம் பலப்படுத்த, நிலைக்க வைக்கவேண்டி, வெள்ளைக்காரன் மாத்திரம் போகவேண்டும் என்கிற காங்கிரசோ, சுயராஜ்யமோ, தேசியமோ, காந்தியமோ சுயமரியாதை இயக்கத்திற்கு வைரியேயாகும். ஆகையால், சுயமரியாதை இயக்கத்தாரால் அழிக்கப்பட வேண்டிய வற்றில் இந்தக் காங்கிரசும், காந்தியமுமே முதன்மையாகும்'' எனப் பெரியார் காங்கிரஸ் பார்ப்பனக் கொள்கையின் முகமூடியைக் கிழித்துக் காட்டி சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையைத் தெளிவுபடுத்தினார்.

## அண்ணல் காந்தியாரின் மூன்று கட்டளைகள் :

காலஓட்டத்தில் அனுபவரீதியாகச் சில கருத்து மாற்றங்களுக்குள்ளான காந்தியார், விரைவில் இந்தியாவிற்கு விடுதலை வழங்கப் போவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவிப்புச் செய்தவுடன் காங்கிரசாருக்கும் மக்களுக்கும் மூன்று கட்டளைகளை அறிவித்தார்.

அவை

1. காங்கிரசைக், கலைத்துவிட வேண்டும்.
2. மதச்சார்பற்ற அரசு அமைக்க வேண்டும்
3. பிராமணர்கள் சமயத்துறையில் ஈடுபட்டு ஒதுங்கி இருந்துகொண்டு பிராமணர் அல்லாதார் படித்து பதவிகளுக்கு வர அனுமதிக்க வேண்டும் எனத் தனது மூன்று கட்டளைகள் மூலம் அறிவிப்புச் செய்தார்.

1948ல் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்சை சேர்ந்த பார்ப்பன கோட்சே பார்ப்பனரல்லாத காந்தியாரைச் சுட்டுக்கொன்றதற்கு இவையெல்லாம் காரணங்களாகும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

**ஒத்த கருத்தில்**
**தந்தை பெரியாரும்**
**அண்ணல் காந்தியாரும் :**

இந்தியா தாங்கள் நினைத்தபடி முழுமையான சுதந்திரத்தினைப் பெறாமல் பேருக்குச் சுதந்திரம் பெற்றதை வெறுத்தவர்கள் இந்திய மண்ணிலேயே இருவர்தான். ஒருவர் பெரியார் மற்றவர் அண்ணல் காந்தியார்.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற 1947 ஆகஸ்டு 15 அன்று காந்தியார் இந்திய சுதந்திரம் பற்றி என்ன கருதினார் என்பதைப் பற்றி, காங்கிரசின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரும், மத்திய, மாநில அமைச்சரவைகளில் அமைச்சராக இருந்தவரும் பின்னர் மராட்டிய மாநில ஆளுநராகப் பதவிவகித்தவருமான சி.சுப்பிரமணியம் அவர்கள் சுதந்திரதினமலர் 17.08.97 ராணி வார இதழில் 'அந்த நாள் ஞாபகம்' என்ற தலைப்பில் தெளிவாகப்படம் பிடித்துக் காட்டியுள்ளார். "ஆகஸ்டு 15ந் தேதி நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மகாத்மா காந்தி மறுத்துவிட்டார். மதக் கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்கத்தாவுக்கு அவர் சென்றுவிட்டார். சோகமே வடிவான முகத்துடன் காணப்பட்டார். எதற்காக உழைத்தோமோ அந்த அகிம்சை சுக்கு நூறாக உடைந்து போனதில் மகாத்மாவுக்குச் சொல்லமுடியாத துயரம்.

ஆங்கிலேயருக்குப் பதிலாக இந்தியர்கள் ஆட்சிக்கு வருவதால் மட்டுமே நாம் சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கருத முடியாது. மக்களுக்கு அர்த்தம் உள்ள ஆரோக்யமான வாழ்க்கை கிடைக்க வேண்டும். இந்தியா கிராமமயமாக வேண்டும். கிராமங்கள் தன்னிறைவு பெறவேண்டும்.



வறுமையும், நோயும், மூட நம்பிக்கையும் ஒழிக்கப்பட வேண்டும் எனக் காந்தி விரும்பினார். அதுவே இலட்சியமாகவும் இருந்தது'' என சி.சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

அண்ணல் காந்தியார் அகிம்சாவாதி. எனவே தன்னுடைய துக்கத்தைத் தன் மனத்திற்குள்ளேயே போட்டுப் புதைத்துக்கொண்டார்; சுதந்திரத் திருநாள் விழாவில் எதிலும் கலந்துகொள்ளாமல், டில்லி மாநகரின் செங்கோட்டையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக்கொடியினை இறக்கி சுதந்திர இந்தியாவின் மூவண்ணக் கொடி ஏற்றப்பட்டபோது கல்கத்தா நகரின் ஓர் மூலையில் தாங்கமுடியா மனச்சுமையுடன் முடங்கிக் கிடந்தார். ஆனால் தந்தை பெரியாரோ போர்க்குணம் மிக்கவர். அவர் இந்திய சுதந்திர நாளினைத் 'துக்கநாள்' எனப் பிரகடனப்படுத்தியதோடு, அதற்கான காரணத்தையும் தனது அறிக்கை மூலம் விளக்கினார். அவ்வறிக்கையின் தலைப்பு ''சுதந்திர நாள் துக்கநாள்'' என்பதாகும்.

''வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிவிடவில்லை.

இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்வதன் மூலம் இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிருக்கிறார்கள்" எனக் கூறிய பெரியார், மேலும் அதனை விளக்கும் வகையில், அதாவது "பார்ப்பன ஆதிக்கமும், வடநாட்டார் சுரண்டல் வசதியும் ஒரு சுயநல தந்திர சூழ்ச்சிகொண்ட கோஷ்டியார் கைக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டு அவர்களுக்குப் பாதுகாப்புத்தரும் நிபந்தனையோடு அதிகாரத்தை மாற்றியிருக்கிறார்கள் எனக் குறிப்பிடுகின்றார். இன்னும் மிகத் தெளிவாகக் கூறும் வகையில் வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்திர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மக்களுக்கு நன்மையில்லை. வர்ணாசிரம தர்மக் கொடுமை ஒழிவதில்லை என்றும்,

"ஏற்படப்போகும் மாகாண ஆட்சி என்பது, வெள்ளையர் அதிகார ஆட்சிக் காலத்திலிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும், மத்திய அரசாங்கத்திற்குதான் உண்டு.

சில அதிகாரங்கள்தான் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய மந்திரிகளுக்கல்ல" என்று இந்திய விடுதலைக்கு முதல் நாள் 14.08.47ல் வெளியிட்ட அறிக்கையில் தந்தை பெரியார் சுட்டிக்காட்டி உள்ளார். அதுமட்டுமின்றி, அதற்கு முன்னதாகவே இந்திய மக்கள் பெறப்போகும் சுயராஜ்யம் பற்றி தந்தை பெரியார் 27.07.1947ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் "இந்துஸ்தான் சுயராஜ்யம் என்று நாளை கொண்டாடப்போகும் வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சி. பிரிட்டிஷாருக்கு ஏஜெண்டாக-கையாளாகயிருந்து வெள்ளையருடன் வடநாட்டு பிர்லா, பஜாஜ் கோஷ்டியினர் செய்துள்ள ஒப்பந்த ஆட்சியேயன்றி, சுய ஆட்சி என்று எந்த காங்கிரஸ் அரசியல் நிபுணர்களும் கூற முடியுமா?" என்ற வினாவின் மூலம் இந்திய சுதந்திரம் என்பது இந்திய நாட்டின் பார்ப்பன, பணியாக்களுக்கு மேட்டோவர் (அதிகார மாற்றம்) செய்யப்பட்ட ஆட்சியேயாகும் என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளார். மேலும் சுயராஜ்யத்தின் எதிர்காலம் எப்படிப்பட்டதாக இருக்கும் எனக் கூறும் பொழுது, எதிர் காலத்தில் இந்துஸ்தானத்தில், குறிப்பாக நம் நாட்டில் 'நவகாளிகள்'தோன்றுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்மை அவ்வளவு நாசப்படுத்தவே வட நாட்டு ஏகாதிபத்தியம் தயார் செய்து கொண்டிருக்கிறது, சுயராஜ்யம் என்ற பேரால் எனக் குறிப்பிடுகிறார். தந்தை பெரியாரின் துல்லி யமான தொலைநோக்குப் பார்வை, இன்று வட இந்திய நகரங்களிலிருந்து, இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதர மனப்பான்மையுடன் நேற்றுவரை ஏன்!- இன்றுவரை, வாழ்ந்து வரும் தமிழ்நாட்டின் கோவை மாநகரம் வரையிலும் மதக்கலவரத்தால் ஓடும் இரத்த ஆற்றின் மூலம் இந்திய நாடு முழுவதுமே மெல்ல மெல்ல நவகாளியாக் மாறிவருவதை

30386



நிதர்சனமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. அதற்கான மூலகாரணத்தையும் தந்தை பெரியார் பல முறை சுட்டிக் காட்டியுள்ளார்- இது மதவெறி மற்றும் வர்ணாஸ்ரம தர்ம சாதி வெறியின் வெளிப்பாடே என்று .

**வெள்ளி விழாவின்போது**
**பெரியாரின் படப்பிடிப்பு:**

இந்திய நாட்டுச் சுதந்திரத்தின் பொன்விழாவினை நாம் கொண்டாடும் பொழுது நம்மிடையே பெரியார் இல்லை. இருந்திருந்தால், ஒரு சிலரின் சுயநலத்தினால் உருவாகியுள்ள சுயராஜ்யத்தால் இன்று உருவாகியுள்ள யோக்கியதையை நமக்குப் படம் பிடித்துக் காட்டி இருப்பார். இருந்த போதிலும் இந்திய நாட்டு சுதந்திரத்தின் வெள்ளிவிழாவின்போது இந்திய நாட்டின் தகுதியையும் இந்திய மக்கள் தகுதியையும் தந்தை பெரியார் படம்பிடித்துக் காட்டியுள்ளதை நாம் தெரிந்து கொண்டாலே நம்முடைய இன்றைய வளர்ச்சியின் தகுதியை நாமே சுய பரிசீலனை செய்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே 15.081972ல் ‘விடுதலை’ இதழில் தந்தை பெரியாரால் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தின் சில பகுதிகளைக் காண்போம்.

"இந்தியாவுக்குப் பல நூற்றாண்டு காலமாக இருந்து வந்த அன்னிய நாட்டின் ஆட்சி ஒழிந்து, நம் நாட்டை நாமே ஆளும்படியான சுதந்திர சுய ஆட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆனதாகவும், அதற்கு ஆக சுதந்திர தின வெள்ளி விழா கொண்டாடுவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை நான் இதைச் சுதந்திரம் பெற்ற நாள் என்று சொல்லமாட்டேன். மற்றென்ன வென்றால் அடிமையும், மடமையும், ஒழுக்கக்கேடும், நேர்மைக்கேடும் ஏற்பட ஏதுவான (துக்க) நாள் என்றுதான் சொல்வேன்.

இதை இன்று மாத்திரம் சொல்லவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் என்று என்றைக்கு வெளியிடப்பட்டதோ அன்றே சொன்னவன் நான்" என்று தனது தலையங்கத்தைத் தொடங்கியுள்ள பெரியார், மேலும் நம் நாட்டின் ஆட்சி மற்றும் அரசியல் போக்கின்தன்மைகளைப் பற்றி கூறும் பொழுது, "இன்று இந்த நாட்டில், ஓர் ஆட்சிக்கு இருக்கக் கூடாத எந்த அயோக்கியத் தனமும், ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, புரட்டு, பித்தலாட்டம், மானங்கெட்டதனம், கட்சி மாறல், கட்சிக்குத் துரோகம், இழி தன்மையான சுய நலம், அபாண்டமாய் குறை கூறல் முதலிய கூடா ஒழுக்கக் காரியங்கள் எந்தக் கட்சியில் யாரிடம் இல்லாமல் இருக்கின்றன? இப்படிப்பட்ட காரியத்துக்காக யார் வெட்கப்படுகிறார்கள்?" எனக் கூறியதோடு, இன்றைய சமுதாய நிலையினைக் குறிப்பிட்டு, "காலித்தனத்திற்குப் பெயர் வேலை நிறுத்தம்; அயோக்கியத்தனத்திற்குப் பெயர் அகிம்சை; சண்டித் தனத்திற்குப் பெயர் சத்தியாகிரகம். தான் பதவி பெற்ற கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு, எதிர்க்கட்சிக்கு ஆளாவது முதலிய அயோக்கியத் தனங்கள் எப்படி யோக்கியமான சுதந்திரமாக இருக்க முடியும்?" என்ற தந்தை பெரியாரின் கருத்துக்களையும், கேள்விகளையும் சுதந்திரப் பொன் விழாக் கொண்டாடும் இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவை ஆகும். அவ்வாறு சிந்திக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் முக்கியக் கடமையுமாகும்.

தந்தை பெரியாரும் சரி, அண்ணல் காந்தியாரும் சரி, இருவருமே இந்திய சுதந்திரத்தை மகிழ்ச்சிக்கு உரியதாக ஏற்கவில்லை. துக்க தினமாகவே கருதினர். அதற்குரிய ஒரே காரணம் இந்தியநாடு அவர்கள் நினைத்த சமத்துவ சமுதாயத்தை உடைய சுதந்திர நாடாக அமையாமல் ஆட்சி (அதிகார) மாற்றம் என்ற ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்ததுவே ஆகும்.

> அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்கல் ஆகா அரண் - குறள்



'மூத்தோர் சொல்லும், முது நெல்லிக் கனியும் முன்னர் கசந்து பின்னர் இனிக்கும்' என்ற முது மொழிக்கு ஏற்பவே இந்திய சுதந்திரம் இன்று அமைந்துவிட்டதை, சுதந்திர இந்தியாவில் நடைபெற்று வரும் வட இந்திய மதக் கலவரங்களும், தமிழ் நாட்டின் சாதிக் கலவரங்களும், நம்தமிழ் நாட்டிலும் கூட புதிதாகத் தோன்றியுள்ள மதவெறிக் கலவரங்களும், இந்தியாவெங்கும் நீக்க மற நிகழ்ந்து வரும் ஆட்சி அதிகார ஊழல்களும், பெரியாரின் வகுப்புரிமை முழக்கம் இன்று மத்திய அரசிலும் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்பும்கூட எங்கும் எதிலும் (ஆட்சியிலும், அதிகாரத்திலும்) பார்ப்பன ஆதிக்கமே மேலோங்கி நின்று நிலவுவதும் தெளிவாகக் காட்டுகின்றன.

**இன்றைய தேவை,**
**இரண்டாம் விடுதலைப் போரே!!**

அதனால்தான் இந்தியா விடுதலை பெற்று 50 ஆண்டுகளுக்குப் பின்னர் பொன் விழாவினையொட்டி நடைபெற்ற நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தில் "பொது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நியாயமும் நேர்மையும் நீடிக்கவும், மக்கள் நடுவில் நல்லெண்ணம் பெறவும் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் தேவை" என நாடாளுமன்றத் தலைவர் சங்மா நாடாளுமன்றத்திலேயே வெளிப்படையாகக் கூற வேண்டிய நிலையும், அக்கருத்தினையே வேறுவகையில் இந்தியப் பிரதமரும் தனது உரையில் வழிமொழிந்து கூற வேண்டிய சூழ்நிலையும், தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞரும், சாதி ஒற்றுமைக்காகவும் மத ஒற்றுமைக்காவும் மனித சங்கிலியினை நடத்தி இன்றைய நிலை குறித்து மனங்குமுறிப்பேச வேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

> சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
> பேராண்மை வேண்டு பவர் — குறள்

ஆம்! நாம் இப்பொழுது பெற்றிருக்கும் சுதந்திரம் நமக்கும் -ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கும் ஓர் முழுமையான சுதந்திரமாக அமையவில்லை என்பதே இன்று எல்லா மட்டத்திலும் ஒருமித்த கருத்தாகும்.

இந்தியாவில் சுதந்திர நாள் பொன்விழா ஆண்டினை நாம் ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவதால் மட்டும் அரசியல், பொருளியல், சமுதாய நிலைகளில் முழுமையான சுதந்திரத்தை நாம் பெற்றுவிடப் போவதில்லை. தந்தை பெரியாருக்குப்பின் இன்று தமிழ்ச் சமுதாயத்தின் வழிகாட்டியாகத் திகழும் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் வீரமணி அவர்கள் " இன்றுஇந்திய நாட்டில் மண் ஒருமைப்பாட்டைவிட மனித ஒருமைப்பாடே மிக முக்கியமானதாகும்" என்று சுட்டிக்காட்டியிருப்பதை நாம் கவனத்தில் கொண்டு, முதலில் நாம் மனிதனை மனிதனாக மதிக்கும் சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதல் வேண்டும். அதற்குத் தந்தை பெரியார் நமக்குக் காட்டிச் சென்றுள்ள வழி முறையே நம்மை (மனிதனுக்கு மனிதன்) சம உரிமை பெற்ற புதிய சமத்துவ சமுதாயத்திற்கு இட்டுச் செல்லும் ஏணிப்படியாகும். அதற்கான ஒரே வழி முறையாகத் தந்தை பெரியார் காட்டிய வழியில் ஆட்சி, அதிகாரம், கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய அனைத்தும் பரம்பரை பரம்பரையாக ஒரே இடத்தில் ஒரே சாதியினிடத்தில் குவிந்து கிடக்காமல் அவரவர் சாதி (வகுப்பு) எண்ணிக்கைக்குத் தக்கவாறு பரவலாக்கப்படுவதே இந்திய சமுதாயத்தில் சமத்துவ சமுதாயத்திற்கான சரியான திறவுகோலாகும். பெற்ற சுதந்திரத்தினைப் பேணிக்காப்பதோடு, இந்தியாவின் உண்மையான-இந்திய மக்களனைவரின் சமுதாய விடுதலைக்குத் தந்தை பெரியார் பாடுபட்ட வழிமுறைகளில் அவர் காட்டி சென்றுள்ள வழியில் முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியினை ஏற்போம்-இந்தியாவின் இரண்டாம் விடுதலைப் போரினை விரைவில் தொடங்கி வெற்றியினைக் காண்போம். இறுதியாக, உண்மையான சுதந்திரம் பற்றி தந்தை பெரியார் கூறிச் சென்றுள்ள வாசகத்தினையும் நினைவு கூர்வோம்; செயலாக்குவோம்.

"துக்க நாள் ஒழிக! உண்மை சுதந்திர நாள் தோன்றுக!!



# 89ஆம் ஆண்ட
# பெரியார் பிறந்தநாள்

முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா -

விடுதலை மலர்
சென்னை.

## அந்த வசந்தம்!

எனக்கென்று ஒரு வசந்தகாலம் இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஆண்டு பலவற்றுக்குப் பிறகு-அந்த வசந்தகாலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலமும் தெரியும்; இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

வசந்த காலம் என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் காடு மேடு பல சுற்றிவந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது கலவரம் எழாமல் ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும் - பெரிய வெற்றி என்றே பெருமிதம் தோன்றும். புறப்படு முன்னர், தலை போகும் - தாடி போகும் - உயிர் போகும் என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

### பெரியாரால் திருந்திய தமிழரோ பலப்பலர்!

அண்ணாதுரை! இதைப் பார்த்தாயா! என்று ஒரு கடிதத்தை வீசுவார். ஆமாமய்யா! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா? என்று என்னைக் கேட்கமாட்டார் - வருவேன் என்பது அவருக்கு நன்கு

தெரியுமாதலால், செல்வோம்; பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின், அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக மாலை வாங்கிக்கொண்டுதான் வருவார்! அத்தகைய தெளிவும் வாதத்திறமையும் பேச்சில் கிடைக்கும். அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலப்பலர் திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

**வரலாற்றில் தனி**
**இடம் பிடித்தவர்**

ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றிபெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. அந்த வரலாறு துவக்கப்பட்டபோது நான் சிறுவன். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப் பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் வசந்தம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்ற பலரைவிட இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள்; இன்றும் நினைவில் கொண்டு வரும்போது இனிமை பெறுகின்றேன்.

நல்லவற்றைப் பாராட்டி வளர்ச்சி காண்போம்
நானிலத்தை உயர்வாக்கி மகிழ்ச்சி பூண்போம்

அறிவியக்கம் ஒரு நூறு



**எதையும் தாங்கும்**
**இதயத்தை எனக்குத் தந்தார்!**

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார். பொதுத்தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; உன்னை எனக்குத் தெரியும் போ! என்று உரத்தக் குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன்; ஒருநாள் கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்துகொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று தனியாக வைத்திருப்பார். என்னைத் தனது குடும்பத்தில் பிறவாப் பிள்ளை எனக் கொண்டிருந்தார்.

**தமிழன் வரலாற்றின் முக்கிய கட்டம்:**

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத் தான்.

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார்-நான் அவருடன் இணைந்தபோது; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்குமுன் முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றிவந்திருக்கிறார்.

இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்லுகிறாரே! என்று கூறியும், விட்டுவைக்க கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்! என்று மிரட்டியும் தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர். ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர் - மூலையில் நின்றாகிலும்,

மறைந்திருந்தாகிலும்! அந்தப் பேச்சு அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது: எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக்கண்டனர்; கொதித்தவர்கள் அடங்கினர்; மிரட்டினோர் பணிந்தனர்; அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர்! அவருடைய பேச்சோ-அது தங்குதடையன்றி வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மலைகளைத் துளைத்துக்கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடுகளைக் கழனிவளம் பெறச் செய்துகொண்டு, ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்துப் பேசுகிறார், இதுகுறித்துப் பேசுகிறார்-என்று தமிழகம் இந்த அய்ம்பது ஆண்டுகளாகக் கூறிவருகிறது.

**பெரியார் வாழ்வு முழுவதும்**
**உரிமைப் போரே!**

மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன்-எது நேரிடினும் என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர்கண்ட வெற்றி மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனத்திற்குச் சரியென பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு, மிகப் பெரியது.

**பெரியார் கண்ட தமிழகம்**

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாது. பிறபகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது, வியர்த்துப் போகின்றனர். அப்படியா!-முடிகிறதா!-நடக்கிறதா!-விட்டுவைத்திருக்கிறார்களா!-என்று கேட்கிறார்கள்- சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு.



அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் மேலும் இதுபோன்ற பல நகர்களில் என்னையும் உடன் அழைத்துக்கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒவ்வொரு ஊரிலும், இதுபோலத்தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதிகள்!

அந்த இடத்துப் பகுத்தறிவு வாதிகள் படிப்பார்கள்-பெரிய பெரிய ஏடுகளை; எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை! கூடிப் பேசுவார்கள் சிறிய மண்டபங்களில், போலீசு பாதுகாப்புப் பெற்றுக்கொண்டு! இங்கு?

**பழைமையின் பிடிவாதம் பொடிப்பொடியானது!**

இங்கா! இவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித்திணறாத பழமை உண்டா? எதைக்கண்டு அவர் திகைத்தார்! எதற்கு அவர் பணிந்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது? ஏ! அப்பா! ஒரே ஒருவார், அவர் நம்மை அக்கு வேறு, ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே என்று; இந்நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை என்று எக்காளமிட்டுக்கொண்டிருந்த பழமை அலறலாயிற்று! புதுப்புது பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும் இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதை அறியாதார் இல்லை!

எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல. ஒரு சகாப்தம்-ஒரு கால கட்டம்-ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.
>
> – குறள்

அக்கிரமம் தென்படும்போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காத்படி தடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக்கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியும்தான் தோன்றும்; எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

**நேர்மைக்காகப் பெரியார் :**

பெரியார் அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்கபலத்துடன் வந்திடினும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது! அவர் வயது89! ஆனால் போர்க்களத்திலேதான் நிற்கின்றார்!!

அந்தப் போரிலே ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் வசந்தம் என்று குறிப்பிட்டேன்.

**வாழ்க பெரியார் !**

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன், நமக்காக வாழ்ந்திருக்க வேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு, பன்னெடுங்காலமாக இருந்துவரும் கேடுகள் கள்ளயப்படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் என்பதில் அய்யமில்லை.

ஏதேதோ பேசிக்கொண்டு இருக்கின்ற இணையீர்
இடுப்புக்குள் நலிவேறிக் கிடக்கின்ற முதியீர்
போதாது போதாது நாம்கொண்ட சீற்றம்
பொங்கட்டும் இதயத்தில் புதுரத்த ஓட்டம்

*முனைவர் சாலையார்*



**தமிழக முதல்வர்.**
**பெருந்தலைவர்**
**கு. காமராஜ் அவர்கள்,**

**"தகுதி**
**திறமை"**
**மோசடி !**

எல்லாம் விதியின் செயல், அவனவன் தலையில் எழுதியபடித்தான் நடக்கும் என்று எதையும் நாம் விட்டு விடக்கூடாது.

எவன் தலையில் என்ன எழுதினான்? தலைவிதி என்று எவனும் எழுதவில்லை. விதியின் செயல் என்று எதையும் விட்டுவிடக்கூடாது.

அதை மாற்றியே தீரவேண்டும். சமுதாய முன்னேற்றத்தில் மாறுதல் அவசியமாகும்.

ஒருவன் ஏழையாக இருப்பதற்கும்-மற்றவன் பணக்காரனாக இருப்பதற்கும் அவனவன் தலையில் எழுதிய எழுத்து, தலைவிதி என்று ஒரு சில அதிமேதாவிகள் கூறி வருவது தெரிந்ததே. இந்த அதிமேதாவித்தனம் ஏழைகளை ஏமாற்றுவதற்குத்தான்.

பரம்பரையாக உத்தியோக ஆதிக்கம் படைத்திருப்பவர்கள் தகுதி-திறமை என்று பேசுகிறார்கள். இந்த தகுதி-திறமை என்பதெல்லாம் ஒரு பெரிய மோசடி. உன் தகுதியும் திறமையும் எனக்குத் தெரியாதா என்ன? நாலைந்து தலைமுறையாக உனக்கே படிப்பு இருந்ததினால் உனக்கு இந்தத் தகுதி, வசதி வந்துவிட்டது. என் மகன் இன்றைக்குத்தானே பள்ளிக்கூடத்துக்குப் போகிறான். இன்னும் நாலைந்து தலைமுறையானால் என் பிள்ளைக்கும் தானாக அந்தத் தகுதி வரும். தகுதி திறமை என்று பேசுகிறவன் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா? சம சந்தர்ப்பம் கொடுத்தாயா?

**பார்ப்பான் ஊசி போட்டால்தான் உயிர் பிழைக்குமா?**

ஒருவனுக்கு நன்றாக கறி சாப்பாடு போட்டு வளர்க்கிறாய். இன்னொருத்தன் மூன்று நாள் பட்டினி கிடந்தவனாய் இருக்கிறான். இரண்டு பேரையும் சண்டைக்கு விட்டு கறி சாப்பாடு சாப்பிட்டவன் ஜெயித்தால் அதற்கு தகுதி-திறமை என்ற பேரா? பட்டினி கிடப்பவனுக்கும் அதே கறி சாப்பாட்டைப் போடு. அப்புறம் சண்டைக்கு விட்டால் இரண்டு பேர் தகுதி-திறமையும் ஒன்றாகத்தானே இருக்கும்.

பறையன் டாக்டராக வந்து ஊசி போடுகிறான். அவன் ஊசி போட்டதாலே எந்த நோயாளி செத்துப் போய்விட்டான்? அவன் என்ஜினீயராக வந்து கட்டின பாலம் எது இடிந்து விட்டது? அப்போ பறையனுக்கும் தகுதி வந்துவிட்டதா இல்லையா? தகுதி-திறமை என்பது உயர்ந்த ஜாதிக்காரனிடமும் இந்தப் பரம்பரை உத்தியோக ஆதிகக்கக்காரனிடமும் தானா இருக்கிறது?

இப்படி தகுதி, திறமை என்று கொஞ்ச நாளாகவா நீங்க ஏமாத்துறீங்க? நாலாயிரம் அய்யாயிரம் ஆண்டுகளாகவே ஏமாத்தி வருகிறீர்கள். மந்திரம் தந்திரம் என்று சொல்லி ஏமாத்தி கொஞ்ச நாள் ஆதிக்கம் செலுத்தினீர்கள். இப்போது படிப்பு என்று சொல்லி ஏமாத்துகிறீர்கள். புத்தகம் படித்துவிட்டால் தகுதி-திறமை வந்து விடுமா? இல்லை வந்துவிட்டதாக அர்த்தமா? உன் திறமையும் எனக்குத் தெரியும். உனக்குச் சொல்லிக் கொடுத்தவன் திறமையும் எனக்குத் தெரியுமே.

பல்வேறு விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கு ஆர்வம் வேண்டும். எல்லாம் தெரிந்துவிட்ட மாதிரி சிலர் இருப்பார்கள், அது சரியல்ல. நாம் அறியாத பல விஷயங்களும் இருக்கலாம். அறிவுக்குத் தாழ்போட்டு அடைத்துவிடக்கூடாது. உலகம் எப்படி எல்லாமோ



மாறிக்கொண்டு வருகிறது. மனிதன் பிறந்தது முதல் இறந்ததுவரை அத்தனை மாறுதலுக்குள்ளாகிறான். ஆகவே, மாறிவரும் உலகத்தின் தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் தற்பொழுது மேற்கொண்டுள்ளதெல்லாம் இறுதி முடிவுகளென்றே கூறமுடியாது. சமுதாயம் முன்னேற இன்னும் எவ்வளவோ மாற்றங்கள் தேவைப் படுகின்றன. ஆராய்ச்சியாளர்கள் இன்னும் ஆராய்ந்து கொண்டுள்ளார்கள். ஆராய்ந்து கண்டதை வெளிப்படையாக சொல்லியாகவேண்டும். அறிவுக்குத் தாழ்போடக் கூடாது. ஆராய்ச்சியாளர்கள் தாழ்போடக் கூடாது. சமுதாயத்திற்குத் தாம் கண்ட உண்மைகளைச் சொல்லியாக வேண்டும். வயதானவர்கள் பிடிவாதக்காரர்களாயிருப்பார்கள். பழைய சம்பிரதாயங்களை மாற்ற விரும்பமாட்டார்கள். அவர்கள் சும்மாவும் இருக்க மாட்டார்கள். எதையாவது கூறிக்கொண்டு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் இளைஞர்கள் யோசனை பண்ணவேண்டும்.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகள் இந்நாட்டில் நீண்ட காலமாக இருந்துகொண்டு மக்களை மடமையில் ஆழ்த்தி வருகின்றன. இந்த நாட்டிலே உயர்ந்த சாதி என்பவன் அயோக்கியனாய், திருடனாய், சோம்பேறியாய் இருந்தாலும், அவன் உயர்ந்த சாதியில் பிறந்தவன் என்பதற்காக உத்தமன் ஆகிவிடுகிறான். உதாரணமாக, பாரதத்தில் வரும் தருமன், ஆட்சியைத் தன் உடன்பிறப்பை, தனது மனைவியை ஏன் தன்னையே அடகு வைத்துப் பகடையாடினான். அவனை நம் நாடு தருமவான் எனப் போற்றுகிறது. உயர்ந்த குலத்தில் பிறந்தவன் என்பதற்காக சமுதாயக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். ஆனால் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஒருவன், நாணயப் பொறுப்புள்ளவனாக இருந்தாலும், இனப்பாகுபாடு அவனை முன்னுக்கு வராமல் தடுக்கிறது. இப்பிளவைப் போக்கி, அனைவரும் சமம் என்ற ரீதியிலே மக்கள்ள மக்களாக நடத்துவது தான் சமதர்மம்.

சிநதனைச்சுடர் பதிப்பகம்,
சென்னை.

30386

| நெ | நூல் | ஆசிரியர் | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|---|
| 1 | எழுச்சிவேண்டும் | முனைவர். சாலய் இளந்திரையன் | 28-8-1971 |
| 2 | இவர்தான் சாலய் | குடந்தய் குகன். | 1-6-1958 |
| 3 | பெரியாரியம் | "குடந்தய்" குகன் | 25.9.1985 |
| 4. | சுத்துணவு மாணவர்கள் | அரசு புத்தகம் | 28-7-1985 |
| 5 | அறிவு நெறி | 'குடந்தய்' குகன் | 13-12-1987 |
| 6. | இலண்டன்மலர் | வய்.மு. கும்பலிங்கன் | 17-1-1987 |
| 7. | சுயநலம் | குடந்தய் குகன் | 28-3-1986 |
| 8. | கொடுமையின் கோடுகள் | இளங்குயிலன் | 21-8-1990 |
| 9. | பூங்கொடிகள் | பேராசியர் ஞாசேகரன் | 1-2-1997 |
| 10. | ஆறுகண்டார் அதனால் சோறுகண்டார் | கலைஞர் மு. கருணாநிதி | 11-6-1997 |
| 11. | இந்திய விடுதலைப்போரும் தந்தைபெரியாரும் | அ. இளங்கீரன் M.A., M.Ed., | 11-2-1998 |
| 12. | தாராசுரம் வரலாறு | முனைவர் சிவப்பிரகாசம் | அச்சில் |
| 13. | தூய்மை 2000 | அறிவாநந்தர் இர. முருகேசன் | அச்சில் |
| 14. | கண்தானம் | பெரப்படி ராமராஜ் M.A., சிறு நூல்) | 6-4-1997 |

பல சிறு நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் மன்ற நேயங்கள் வளம்பெற செய்வதற்காகவே வெளியிடப்பட்டுள்ளது.

**இரஞ்சிதம் பதிப்பகம்**
தாராசுரம்

**அறிவாநந்தர் அச்சம்,**
**இர. முருகேசன்-சரோசா**
கும்பகோணம்

இனிய இல்லறம் வாழிய —
வாழிய வாழியவே —

**மணநாள் : 6-4-97**

**மணமக்கள் : முத்துக்குமார் அறிவழகி**

**புதுமையின் எதிரிகள்**

| | |
|---|---|
| புகழ் | பெருமை |
| கல்வி | ஆயுள் |
| ஆற்றல் | நல்லூழ் |
| வெற்றி | இளமை |
| நன்மக்கள் | பொருள் |
| பொன் | துணிவு |
| நெல் | துகர்ச்சி |
| அறிவு | நோயின்மை |

**கண்தானம் நூல் வெளியீடு**

அறிவாளிகளும் இருக்கிறார்கள். அதில் நம் முருகேசனும் ஒருவர் என்பது என் கணிப்பு.

நமது முருகேசன் இன்னொரு புதுமைப் புரட்சியையும் நிகழ்த்தியுள்ளார். அறிஞர்களால் - தலைவர்களால் மட்டுமே கொள்கை முழக்கங்களைத் தரமுடியும் என்பதை மாற்றி, தன்னைப் போன்ற சாதாரண ஏழை, எளிய உண்மைத் தொழிலாளத் தொண்டர்களாலும் கொள்கை முழக்கங்களைத் தரமுடியும் என்பதை 'சிந்தனை - செயல்-ஆக்கம்' என்ற வாசகத்தின் மூலம் மெய்ப்பித்துள்ளார். ஆம் ! நண்பர் முருகேசன் வழங்கிய - முழங்கிய வாசகமே சிந்தனை - செயல் - ஆக்கம் என்பதாகும்.

மானுடத்தைப் பயின்ற - மனிதப்பண்பு மிக்க நம் முருகேசனுக்கு நீண்ட நாட்களாக மனத்தில் ஒரு நெருடல் இருந்து வந்தது. மனித நேயம் பெற்றவன் பெரியாரியக்கத்தில் பற்றாளனாக இருக்க வேண்டும் என்பது யதார்த்த உண்மை.

தொடக்கக் காலத்தில் தேசிய காந்திய வாதியாக, தன் பொது வாழ்வை தொடங்கிய ஈ.வெ.ராமசாமி காங்கிரசு இயக்கத்தில் தனக்கு ஏற்பட்ட கருத்து மாறுபாடு காரணமாக வெளியேறி தந்தை பெரியாராக உயர்ந்து சுயமரியாதை இயக்கம் கண்டார் என்பது தமிழக வரலாறு.

இந்நிலையில் பெரியாரைத் தாக்க எண்ணிய தேசியத்தார் வெள்ளையனுக்கு வால் பிடிப்பவர் - தேசத்துரோகி என அர்ச்சித்தனர். மேலும் இந்திய தேசிய விடுதலை வரலாற்றில் பெரியாரை இருட்டடிப்பு செய்து மறைக்கவே முயன்றது ஆரியப்பார்ப்பன காங்கிரசு.

சுதந்திரப் பொன்விழா கொண்டாடப்படுகிற இந்தக் காலக்கட்டத்தில் இந்திய விடுதலைப் போரும் தந்தை பெரியாரும் என்னும் இந்த நூலை வெளியிடுவதன் மூலம் தந்தை பெரியாரின் இந்திய தேசிய உழைப்பை-உணர்வை வெளிப்படுத்தி தன் நெருடலை நண்பர் முருகேசன் சரி செய்து கொள்கிறார்.

ஆம்! நண்பர் முருகேசன் பெரியாரின் இந்திய தேசிய உழைப்பை - உழைப்பின் பயனை மக்கள் அறிய வேண்டும் என்று சிந்தித்தார். (சிந்தனை) ஆசிரியர் இளங்கீரன் நூலாக எழுதிச் செயல்பட்டார் (செயல்() இப்போது நம் கரங்களில் நூலாக ஆக்கப் பெற்றுத் தவழ்கிறது (ஆக்கம்)

இன்றைய சுயமரியாதைப் பகுத்தறிவு நாத்திக இயக்கத்தின் தந்தை பெரியாரே அன்றைய ஆரம்பகாலக்கட்டத்தில் காந்தியாரே பாராட்டிப் போற்றும் அளவுக்கு இந்திய தேசிய விடுதலைக்கு உழைத்து வித்திட்டவர் என்பதை நாட்டு மக்கள் அறிவாராயின், அதுவே இப்புத்தக வெளியீட்டின் வெற்றியும் பயனும் ஆகும் !

ஆம்! நம் நண்பர் முருகேசன் மானுடத்தைப் பயின்றவர் மட்டுமல்ல வென்றவரும் ஆவார் !

**வய்.மு. கும்பலிங்கன் (குடந்தய் குகன்)**

(தலய்மய் ஆசிரியர் - கருப்பூர் சாலய் நகராட்சிப்பள்ளி, கும்பகோணம்)

39, பேட்டய் க.வி. வடக்கு வீதி,

குடந்தய் - 612 001.

**(தலய்மய் ஆசிரியர் - கருப்பூர் சாலய் நகராட்சிப்பள்ளி, கும்பகோணம்)**

**எங்கள் பணி மீண்டும் தொடரும்....**

அறிவாநந்தர்
**முருகேசன்**



ஆசிரியர்
**குடந்தய் குகன்**

## மானுடத்தைப் பயின்றவர் !!

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட் பண்பு இல்லாதவர்** - என்பது வள்ளுவக் குறள்நெறிக் கருத்து. ஒருவன் எவ்வளவு பெரிய செல்வச் சீமானாக இருந்தாலும், படித்துப் பட்டம் பல பெற்றவனாக இருந்தாலும், பதவிகள் பல வகிக்கின்ற பெரிய ஆளுகைக்காரனாக இருந்தாலும், புகழுக்கும் பெருமைக்கும் உரியவனாக இருந்தாலும் அவனிடம் மனிதப் பண்பு இல்லை எனில் அவன் 'மரம்' போன்றவனே ஆவான் என்பது இக்குறட்பாவின் நெடிய விளக்கம்.

மனிதப் பண்பு என்றால் என்ன? மனிதன் மிருகத்திடமிருந்து வேறுபடுவது இந்தப் பண்பு நிலையால்தான்! எந்தப் பண்பு நிலையால்? சிரிக்கின்ற - சிந்திக்கின்ற - செயல்படுகிற தனித்துவத்தால்! - மனிதநேய மற்றவரை அறிபவரும் உணர்பவரும் மதிப்பவரும் எவரோ அவரே உண்மையான மனிதர்கள் ஆவார்கள். கயவர்களும் மக்கள் போலவே இருப்பார்கள் என்பதை 'மக்களே போல்வர் கயவர்' என்னும் குறள் சுட்டுகிறது.

"என்ன கதை விடுகிறீர்கள்? தாங்கள் சொல்ல வந்த செய்திக்கு நேரிடையாக வாருங்கள்!" என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது.

நாட்டிலே பெரும்பலர் தங்கள் தேவைக்கும் விருப்பத்திற்கும் காப்பி சாப்பிடும்போது உடன் இருக்கும் நமக்கும் வாங்கித் தருவார்கள். ஆனால் நம் நண்பர் முருகேசனோ தன்னை நாடியும் விரும்பியும் பார்க்க வருபவர்கட்கு அன்பு மரியாதை நிமித்தம் காப்பி வாங்கித் தரும்போது தானும் சாப்பிட்டுக்கொள்வார். இந்த இடத்தில்தான் நண்பர் முருகேசனை மானுடத்தைப் பயின்றவர் என்று சொல்ல வந்தேன்.

நானும் நண்பர் முருகேசனும் இன்னும் சிலரும் அச்சகத்தில் அமர்திருக்கிறோம். நண்பர் முருகேசனிடம் தேநீர் குடிப்பதற்குக்கூட காசு இல்லை. அந்த நேரத்தில் சாலை வழியே சென்ற ஆதரவற்ற முதியவர் ஒருவர் வந்து" தேநீர் அருந்த காசு கொடுங்கள்" என்று கையேந்துகிறார். இல்லை என்று சொல்ல இயலாத - முடியாத நண்பர் முருகேசன் அந்த முதியவரைப் பார்த்து உட்காருங்கள் என்று சொல்கிறார். நிலைமை புரிந்த நான் முதியவரிடம் ரூபாய் ஒன்று கொடுத்து அனுப்பினேன்.

நான் ஒரு ரூபாய் தந்தது பெரிய செய்தி அல்ல, எனினும் காசு இல்லாத நிலையிலும் இல்லை என்று சொல்லமாட்டாமல் (எப்படியும் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில்) அமரச் சொன்ன அவரின் மனித நேயத்தை மானுடப் பண்பை இன்றும் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

கல்லூரி சென்றும் புத்தகங்கள் படித்தும் பல பேர் மூடர்களாக உள்ள இந்த நாட்டில் கல்லூரி காணாத மானுடத்தைப் பயின்ற சில

உள்ளே......................

**Printed at :** *Roja Computer Printing*, **Kumbakonam, ☎ : 420314.**

"இந்திய விடுதலைப் போரும், தஞ்சை பெரியாரும்" வெளியீடு : இராஜேந்திரம் பதிப்பகம், குடந்தை.